
**Laodicean Times**

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு15 தொகுதி 4 அக்டோபர் - டிசம்பர் 2025

**R 5579**

## ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதற்கான வேதஆதாரங்கள்

SCRIPTURAL PROOFS OF SPIRIT-BEGOTTEN

**“அவர் சித்தங்கொண்டு ...நம்மை சத்திய வசனத்தின்மூலம் ஜெநிப்பித்தார்” –யாக்கோபு 1:18.**

நம்முடைய கர்த்தர் உலகத்தோற்றத்துக்குமுன் பிதாவோடு அவர் கொண்டிருந்த மகிமையை விட்டுவிட்டு, பூமிக்கு வந்து மனிதரானார், ‘‘மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு, எல்லாருக்குமான மீட்கும்பொருளாக’’ தம்மையே அவர் கையளித்தார் என்று வேத வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. அவருக்கு 30 வயதாகும்போது, தேவனிடத்தில் தம்மையே பலியாக ஒப்புக்கொடுப்பதற்காக அவர் யோர்தானுக்கு சென்றார் என்று நாம் அறிகிறோம். அவருடைய ஞானஸ்நானத்திற்குப் பிறகு தண்ணீரிலிருந்து அவர் வெளியேவந்தபோது, பரிசுத்தஆவி அவர்மீது இறங்கியது. ‘‘வானங்கள் அவருக்குத் திறக்கப்பட்டன’’ (மாற்கு 1:18) . பின்பு அவர் பரிசுத்தஆவியில் வழிநடத்தப்பட்டு(புதிதாக ஜெநிப்பிக்கப்பட்ட இந்த ஆவியில்) பிதாவோடு தொடர்புகொள்ளவும், வேத வசனங்களிலுள்ள தீர்க்கதரிசனங்களையும் அடையாளங்களையும் கற்பதற்காகவும், விரோதியால் சோதிக்கப்படவும் 40 நாட்கள் வனாந்தரத்திற்குச் சென்றார். அதன்பிறகு இந்த தீர்க்கதரிசனங்களிலும் நிழல்களிலும் காண்பிக்கப்பட்டபடி, அவருக்காக பிதா குறித்திருந்த வழியை அவரால் தெளிவாகக் காணமுடிந்தது.

தம்மைப் பின்பற்றும்படி கர்த்தர் தம் சீஷர்களுக்கு அழைப்பிதழ் கொடுத்து, அவர்கள் அவ்வாறு செய்வதில், அவரது மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதும், அவரது துன்பத்தின் பாத்திரத்தில் பங்குபெறுவதும் அவசியமானது என்றும், இதன்மூலமாக அவரோடு அவர்கள் ஜீவித்து, ஆளுகை செய்வர் என்றும் தெளிவாகக் காண்பித்தார். திருச்சபையானது கிறிஸ்துவின் சரீர அங்கங்களாயிருப்பதையும், அதற்கு அவரே தலையாயிருப்பதையும் வேதாகமம் முழுவதும் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது. அவர் நம் முன்னோடியாகவும், இரட்சிப்பின் தளபதியாகவுமிருப்பதை அவை அறிவிக்கின்றன ; ‘‘...அவர் இருந்த பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்’’. அவருடைய அனுபவங்கள் நம்முடைய அனுபவங்களாக வேண்டும். தம் சகோதரர்களாகிய ‘‘அநேகம் பிள்ளைகளை தேவனிடத்திற்கு மகிமையில் கொண்டுவந்து சேர்க்கிறார்’’(எபி2:10)என்று அவை அறிவிக்கின்றன.

ஆகவே அவரைப் பின்பற்றுகிற நாம், அவர் எடுத்த அதே துல்லியமான படிகளையே நாம் எடுக்கவேண்டும். அவர் நம் உயரிய முன்மாதிரியாக இருக்கிறார். நமக்காக இயேசு நிறைவேற்றின மீட்பையும், அவருடைய சீஷர்களாகும் நம் வாய்ப்பையும், அவரது மரணத்துக்குள்ளான ஞானஸ்நானத்தை அடைந்து, தெய்வீக வழிகாட்டுதலின்கீழ் விசுவாசத்தினால் காணும் ஆற்றலை அடைகிறோம். ஜீவனுக்குள் நுழைவதற்கான ஒரு நுழைவாயிலாக ஏற்படுத்தக்கூடிய வழி ஏதேனும் இல்லாவிட்டால், மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம் விரும்பத்தக்கதல்ல. இந்த வழி தேவனால் கொடுக்கப்பட்டது, இது முதலாவதாக அவருடைய குமாரனுக்குத் திறக்கப்பட்டது.

### இயேசுவின் மனித மற்றும் ஆவிக்குரிய சுபாவங்கள் மாதிரியாகக் காண்பிக்கப்பட்டன

பாவநிவாரண நாளின் மாதிரியில் நம் கர்த்தருடைய மனித சுபாவம், பலிசெலுத்தப்பட்ட காளையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது. பிரதான ஆசாரியன் பலிசெலுத்தும் வெண்மை சணல்ஆடைகளை

## இம்மாத வெளியீட்டில்


.. ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதற்கான வேதஆதாரங்கள்.. 1
.. தேவஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட தேவ புத்திரர்கள் .. 3
.. திருச்சபையை திருநிலைப்படுத்துதல் .. 9
.. அவர் முன்பு எங்கே இருந்தார் ? ..13
.. எல்லாவற்றிலும் அன்பு கூறுங்கள் – கவிதை ..16



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

அணிந்திருந்தது, இயேசுவின் மனித பலி ஏற்றுக்கொள்ளப்பட்டபிறகு, அவரது மனித சரீரம் நிஜமாகவே தகனமாகுதல் செயல்பாட்டில் இருந்தபோது, ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புதுசிருஷ்டியாகிய அவரை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அவரது உண்மைத்தன்மைக்கான வெகுமதியாக, தெய்வீக சுபாவத்துக்கான அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிந்தைய நிலையை, ஆவியில் பிறந்தபிறகு பிதாவினால் அவர் மகிமை கனம் அழியாமைக்கு உயர்த்தப்பட்ட பிறகு உள்ள நிலைமையை மகிமையும் அலங்காரமுமான வஸ்திரங்களை அணிந்திருந்த பிரதான ஆசாரியன் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்–யோவான் 3: 3–8.

அவ்வாறே அர்ப்பண உடன்படிக்கையில் நாம் நம்மை தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கும் நேரத்தில், நம்முடைய பலி அவரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது, மனிதராக நாம் மரிக்கிறோம், ஆனால் புதிய சுபாவத்தில் புதிதான ஜீவனுக்கு ஜெநிப்பிக்கப்படுகிறோம். பரத்திலிருந்து ஜெநிப்பிக்கப்பட்ட இந்த புதிய ஜீவியமானது, ஏற்றவேளையில் முழுமையாக வளர்ச்சிபெற்ற ஆவிக்குரிய ஜீவியாக நம் கர்த்தரைப்போல ஆகும்வரை, ஆவிக்குரிய போஷாக்கை உட்கொண்டு தொடர்ந்து வளர்கிறது(1யோவா 3:2 ; ரோமர் 8: 29).இந்த செயல்முறையும் அதன் விளைவும், நம் கர்த்தர் ''மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவராக'' இருந்தார் என்று அறிவிக்கிற வேதவசனங்களை நம் நினைவுக்குக் கொண்டுவருகிறது. பிறப்பு(கிரேக்க மொழியில், ஜென்னாவ் –gennao) என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்பட்ட இதே கிரேக்கச்சொல், ''ஜெநிப்பிக்கப்படுதல்'' என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது பிறப்பிக்குதலுக்கான முழு செயல்முறையையும் குறிக்கிறது. முதலாவது துவக்கம், பின்பு கர்ப்பக்காலம், அதன்பின்னர் பிறப்பு என மேம்பாடு அடைகிற விஷயமாக இது உள்ளது.

அவருடைய ஞானஸ்நானத்தின்போது மரணபரியந்தமான அர்ப்பணம் செய்ததிலிருந்து, புதிய ஜீவியத்திற்கான நம் கர்த்தருடைய ஞானஸ்நானம் துவங்கியது. அங்கு துவங்கிய புதுசிருஷ்டி, அதன்பிறகு மூன்றரை ஆண்டுகள் வளர்ச்சியடைந்தது. இக்காலப்பகுதி, முன்பு குறிப்பிட்டதுபோல், அடையாளத்தில் பிரதான ஆசாரியனில் மாதிரியாகக் குறிப்பிடப்பட்டது. அவருடைய ஞானஸ்நானத்தில் அவர் தெய்வீகத்தின் மிக உயர்ந்த தளத்தில், தேவகுமாரனாக ஜெநிப்பிக்கப்பட்டார். அவரைக்குறித்து யோவான் ஸ்நானகன் சாட்சியாக ; ''பரிசுத்தஆவி புறாவைப்போல் வானத்திலிருந்திறங்கி இவர்மேல் தங்கினதைக் கண்டேன்''(யோவான் 1:32) என்று கூறினார். ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே ஆவிக்குரிய காரியங்களைக் காணமுடியும் என்பதே வேத வசனங்களின் பதிவு ஆகும் –1 கொரிந்2:9–16.

**மேற்பரப்பில் காணக்கூடாத ஆழமான சத்தியங்கள்**

கர்த்தர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதன் மிகப்பெரிய முக்கியத்துவத்தின் உண்மை, ஏன் அதிக வார்த்தைகளில் அறிவிக்கப்படாமல், மாறாக உய்த்துணர்ந்து சிந்திப்பதன்மூலம் நிரூபிக்கப்படவேண்டும்? ஆவிக்குரிய சிந்தையுடையோர்க்கு மிக வலுவான சாட்சியம் உள்ளன, ஆயினும் இது மற்றவர்களால் கண்டுணரப்படாமல் கடந்துசெல்லப்படலாம் என்று நாங்கள் இதற்கு பதிலளிக்கிறோம்.. மற்ற முக்கிய வேதாகம போதனைகளுக்கும் இதுவே உண்மையாயுள்ளது. மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் மூலமாக நாம் தெய்வீக சுபாவத்தில் பங்குபெறுவோம் என்று ஒரு வேத வசனம் அறிவிக்கிறது. கிறிஸ்துவின் பின்னடியார்கள் அவரது மகிமையிலும், கனத்திலும், சாவாமையிலும் பங்குபெறுவார்கள் என்று மற்ற வேத வசனங்கள் அறிவிக்கின்றன. ஒரு வசனம்(2பேது1:4) மட்டுமே அந்த வார்த்தைகளில் விஷயத்தைக் கூறினாலும், முதல் வசனத்தைப்போலவே பிந்தைய வசனங்கள்அதே விஷயத்தைக் குறிப்பிடுகின்றன.

நம் கர்த்தரின் உயிர்த்தெழுதலைப் பொருத்தவரை, ''அவர் மாம்சத்திலே கொலை செய்யப்பட்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்''(1பேதுது3:18) என்று அறிவிக்கிறது. அவர் ஆவியாக எழுப்பப்பட்டார் என்று இவ்வசனம் கூறாதிருந்தாலும், அதுவே தெளிவான அர்த்தம். மேலும் இதுவே உண்மை என்பதை நாம் அறிவோம்: ''கர்த்தரே அந்த ஆவி''(2கொரிந்3:17). நம் கர்த்தரைக் குறித்து கொலோசெயர் 1:18இல் நாம் வாசிக்கிறோம்; ''அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; அவரே ஆதியும்(இந்த புதுசிருஷ்டிக்கு), மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்''. நம் கர்த்தர் மரித்தோரிலிருந்து ஒரு ஆவிக்குரிய ஜீவியாகப் பிறந்ததால், ஜெநிப்பிக்குதல் எப்போதும் பிறப்புக்கு முன்னதாக நிகழுவதால், அவர் பிறப்பதற்கு முன்பாக ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கவேண்டும்.

திருச்சபையின் உயிர்த்தெழுதலைக் குறித்து பேசும்போது, அது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாக அறிவிக்கிறது(பிலிப்3:10). அப்போஸ்தலர் பவுல்; ''ஜென்ம சரீரம் விதைக்கப்படுகிறது; ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கிறது'' என்று கூறுகிறார்(1கொரிந் 15:44). ஆகவே ''இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமும்'' உள்ள இந்த விலையேறப்பெற்ற சத்தியங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இந்த வழியிலேயே கர்த்தர் வேதாகமத்தைத் தயாரித்துள்ளார் –இந்த சத்திய ஆபரணங்களை இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக கொடுக்கிறார். தங்கள்

தேடலில் மேலோட்டமாக இருப்பவர்கள், சத்தியத்தின் மிக முக்கியமான அம்சங்களைக் கவனிக்காமல் விடுவார்கள். பின்னர் அவர்களிடம் சிறியபகுதி மட்டுமே இருப்பதைக் கண்டுபிடிப்பார்கள்.

**தெளிவான வெளிச்சம் தற்போது பிரகாசிக்கிறது**

நாம் வேதாகமத்தை ஆராயும்போது, அதன் பல்வேறு கூறுகள் எப்படி சரியாகப் பிரிக்கப்படவேண்டும், எவ்வாறு சரியாக இணைக்கப்படவேண்டும் என்பதைக் கற்றுக் கொள்கிறோம். இப்போது, புதிய யுகப்பிரிவுக்குரிய விடியலின் வெளிச்சம் வசனத்தின்மீது பிரகாசித்து, நம் பார்வைக்கு அதை மேலும் பிரகாசமாக்குகிறது. நாமும் மற்றவர்களும் முன்பு கடந்துசென்று, புரிந்துகொள்ளத் தவறிய அந்த மாபெரும் திட்டத்தை நாம் முழுமையான அற்புதத்தோடு காண்கிறோம். சரியான வகுப்பைச் சேராதவர்கள் சத்தியத்தை அதன் அற்புதமான தெளிவு, அழகு மற்றும் இணக்கத்துடன் காணமுடியாது. தேவனுடைய புத்திரர்களாக, சரியான ஆவியை நாம் அடைந்திருந்தோமானால், தம் ஜனத்துக்காக தேவன் என்ன ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறாரோ, அதை அறிய நாம் விரும்புவோம்.

இது நம் இருதயங்களிலும் சிந்தைகளிலும் சத்தியத்தின் ஆவி இயங்குவதற்கான வாய்ப்பை அளிக்கிறது. இந்த விருப்பம், உலகிற்குரியவர்கள்: பில்லியார்ட்ஸ் அல்லது சதுரங்கம் அல்லது பூல் விளையாடுவோம் என்று கூறும்போது, வேதாகமக் கல்வியை கற்க ஒன்றிணையும்படி நம்மை வழிநடத்துகிறது. நீங்கள் ஏற்கனவே வேதாகமத்தை பலமுறை படித்திருக்கிறீர்கள் என்று அவர்கள் எங்களிடம் புகார் அளிக்கிறார்கள். நாங்கள் அவர்களிடம் : மிகுந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளோம் என்றும், மிகுந்த ஆசீர்வாதத்துடன் இருப்பதாகவும் கூறுகிறோம்.

இவ்வாறு, கர்த்தருடைய திட்டத்தையும், நம்மைக் குறித்த அவரது சித்தத்தையும் அறியவிரும்பும்போது, அதை அவர் நமக்கு மேலும்மேலும் வெளிப்படுத்துகிறார். இதனால் சிறிதுசிறிதாக, பெரிய அளவிலான சத்தியத்தை நாம் ஆதாயமாக்குகிறோம். இது நம் இதயங்களை பெரிதும் மகிழ்விக்கிறது, நாம் வாழும் அற்புதமான நாளைப்பற்றிய அறிவார்ந்த புரிதலை நமக்கு அளிக்கிறது. மேலும் மற்றவர்களின் இதயங்கள் பயத்தால் வீழ்ச்சியுறும்போது, நமக்கு அமைதியையும் நம்பிக்கையையும் அளிக்கிறது.

―――――――

**R 5582**

## தேவஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவபுத்திரர்களும் அவர்களின் வளர்ச்சியும்

SPIRIT-BEGOTTEN SONS OF GOD AND THEIR DEVELOPMENT

**“ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் ” –ரோமர் 8:13, 14.**

தெய்வீகப் பிரமாணத்தை, சரியான ஆவி , மனப்பான்மை, சித்தம், அல்லது உள்ளுணர்வு கொண்டவர்கள் மட்டுமே கைக்கொள்ளமுடியும். மேலும் தேவனோடு பூரண இணக்கம் கொண்டவர்களை மட்டுமே அவருடைய புத்திரர்களாக அங்கீகரிப்பார். பரிசுத்த தூதர்கள் தங்கள் தூதர் மட்டத்தில் தேவ புத்திரர்களாக இருக்கிறார்கள். கேருபீன்கள் தங்கள் சிருஷ்டிப்பின் நிலையில் தேவபுத்திரர்களாக இருக்கிறார்கள். மகிமையடையும் கிறிஸ்துவும் திருச்சபையும், தெய்வீக நிலையில் தேவபுத்திரர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தேவபுத்திரர்களாக இருப்பினும் அவர்கள் வெவ்வேறு தளங்களில் ஜீவிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தேவனுடைய ஆவியினால் ஆளப்படுகிறார்கள். அவர்கள் அந்த ஆவியைப் பெற்றிராவிட்டால் அவர்கள் தேவபுத்திரர்களாக அங்கீகரிக்கப்படமாட்டார்கள். ஏனென்றால் தெய்வீக மனப்பான்மை உள்ளவர்களைத் தவிர வேறு யாரும் தேவனுடைய பிரமாணத்தை கடைப்பிடிக்க முடியாது.

ஆதாம் வீழ்ச்சியடைவதற்கு முன்பு அவர் தேவனுடைய புத்திரராக இருந்தார்(லூக்கா 3 :38). முறையான அல்லது சரியான ஆவி, மனப்பான்மை, சித்தம், உள்ளுணர்வு ஆகியவற்றைக் கொண்டிருந்தார் என்ற அர்த்தத்தில் அவர் தேவனுடைய ஆவியைக் கொண்டிருந்தார். ஆனால் அவர் தெய்வீகப் பிரமாணத்தை மீறியவராக ஆனபிறகு அவர் ஒரு பாவியாக கருதப்பட்டார். கிறிஸ்துவினிடத்திற்கு வந்தவர்களைத்தவிர ஆதாமின் சந்ததியினார் அனைவரும் இன்னும் பாவிகளாகவே இருக்கிறார்கள். இருப்பினும் ஆயிரவருட அரசாட்சியில் ஆதாமின் சந்ததியினர் கிறிஸ்துவுக்குள் வரும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள். அவர்களுக்கு அவர் நித்திய பிதாவாக இருப்பார், அதாவது மேசியாவின் ராஜ்யத்திற்குக் கொடுக்கப்பட்ட அறிவுரைகளுக்கு கீழ்ப்படிபவர்கள் அனைவருக்கும் நித்திய ஜீவனை கொடுக்கும் பிதாவாக இருப்பார்.

தெய்வீக அங்கீகாரத்தை பெறும் அந்த நிலைமையை அடைய, மனுக்குலம் சத்திய ஆவியைப் பெற்றிருக்கவேண்டும்.

மேலும் அந்த வழியில் அவர்கள் வளர்ச்சியடையவேண்டும். அவர்கள் புத்திரர்களாக கருதப்படுவதற்கு அல்லது அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பு, அவர்கள் நீதியின் ஆவி அல்லது மனப்பான்மையை அடைந்திருக்கவேண்டும். அந்த ஆவியை அவர்கள் அடையும்வரை அவர்களால் ஊழியத்தைச் செய்யமுடியாது. ஏனென்றால் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுகிறவர்களையே கர்த்தர் தேடுகிறார். மனுக்குலம் தங்கள் வீழ்ச்சியடைந்த நிலையில் தெய்வீகப் பிரமாணத்தை கடைப்பிடிக்க முடியவில்லை. ஆயிரவருட யுகத்திலும் அவர்கள் மாம்சத்தில் தேவனுடைய சாயலுக்குத் திரும்ப கொண்டுவரப்படும்வரை, அவர்கள் அதை ஒரு பகுதியளவே கடைப்பிடிப்பார்கள்(ஆதியாகமம் 1:26).

### யார் தேவபுத்திரர்கள் ?

வேதாகமத்தின்படி இதுவரை பூமியில் தேவபுத்திரர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்துள்ளது. யூத யுகம் முழுவதும் மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக தேவன் தமது ஜனங்களுக்கு போதகராகவும் வழிகாட்டியாகவும் இருந்தார். ஆனால் இஸ்ரயேலர்கள் தேவபுத்திரர்களாக இருக்கவில்லை. மேலும் அவர்கள் புத்திரத்துவத்துக்கான ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவுமில்லை.மாறாக அவர்கள் வீட்டின் பணிவிடைக்காரர்களாக மட்டுமே இருந்தனர்(எபிரேயர் 3:5). விழுந்துபோன மனுக்குலத்தில் யாருக்கும் தேவனுடைய பரிசுத்தஆவி இன்னும் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் இயேசு இன்னும் மகிமைப்படுத்தப்படவில்லை(யோவான் 7:39).

வேத வசனங்கள் தேவனுடைய ஆவியைக்குறித்து, ஒரு குறிப்பிட்ட நிகழ்வுக்குப்பிறகு அந்த நிகழ்வுக்கு முன்னர் அல்ல – ஒரு விசேஷித்த வகுப்பினர்மீது ஒரு விசேஷித்த விதத்தில் தேவனிடமிருந்து வரும் ஒரு விசேஷித்த செல்வாக்கு என்று பேசுகிறது. ஆவியின் இந்த வெளிப்பாடு பெந்தெகொஸ்தே நாளில் வெளிப்படுத்தப்பட்டது, இதனால் அது இதற்குமுன் எப்போதும் நிகழாத ஒன்றிலிருந்து தனித்தும் வேறுபட்டும் நிற்கிறது. இந்த வல்லமை அல்லது செல்வாக்கு பரிசுத்தஆவி, தேவனுடைய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, சத்திய ஆவி, தெளிந்தபுத்தியின் ஆவி, குமாரத்துவத்தின் ஆவி என்று பல்வேறு விதமாக அழைக்கப்படுகிறது. இந்த பெயர்களால் விவரிக்கப்படும் பல்வேறு பண்புநலன்களும் ஒரே வகுப்பினருக்கு, அதாவது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்குப் பொருந்தும்.

இந்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக மாறி, இதன் காரணமாகவே பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதல் மூலம் இவர்கள் பிதாவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விசேஷித்த வகுப்பினர்களாகின்றனர். இந்த சத்திய ஆவி வேதாகமத்திற்கு ஒளியூட்டுவதால், பரிசுத்தஆவியைப் பெற்றவர்களால் தேவனுடைய வெளிப்பாட்டை இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்ளமுடியும். அவர்களால் தேவனின் ஆழமான காரியங்களை அறிந்துகொள்ளமுடியும். அவைகளை பரிசுத்தஆவி இல்லாமல் அறிந்துகொள்ள முடியாது. இந்த தேவனுடைய ஆவியைப் பெறாத மற்றவர்கள் வேத வசனங்களிலிலிருந்து சில உண்மைகளைப்பெறும் அதே வேளையில், இந்த விசேஷித்த வகுப்பினர் சத்தியத்தின் உண்மையான சாராம்சத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

### சிலர் இயல்பாகவே தேவனிடம் ஈர்க்கப்பட்டுள்ளனர்

பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு முன்னரே தேவஜனங்கள் வழிநடத்தப்பட்டதைக் குறித்து பேசும் சில வேத வசனங்களை நாம் நினைவுபடுத்துகிறோம். பிற்பாடு அவருடைய சீஷர்களாக மாறியவர்களுக்கு ஏற்பட்ட ஒருவித இழுத்துக்கொள்ளுதலைப் பற்றிப் பேசுகையில் நம்முடைய கர்த்தர், ''என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமுடியாது'' (யோவான் 6:44) என்று கூறினார். இந்த இழுத்துக்கொள்ளுதல், கிறிஸ்து மூலமாக தேவனால் குமாரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு வரும் பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்கும் கிரியை அல்ல, மாறாக வேத வசனங்கள் தேவனால் ஈர்க்கப்படுதல் என்று குறிப்பிடுகிறதும், நாம் அனைவரும் அனுபவித்திருப்பதுமான இந்த இழுத்துக்கொள்ளப்படுதல், பாவமான காரியங்களின் பக்கம் அல்லாமல், பரிசுத்தத்தின் பக்கம் செல்லும், ஒரு மாம்சப்பிரகாரமான வழிகளிலான இயல்பான இழுத்துக்கொள்ளப்படுதலாகத் தோன்றுகிறது. ஆனாலும் இது இயல்பான மனிதனுக்குரிய வழிகளில் செல்கிறது.

உதாரணமாக, தேவன் ஆதாமை சிருஷ்டித்தபோது இயல்பாகவே அவர் தேவனை நேசிப்பார், இயல்பாகவே அவர் தேவனுக்கு ஊழியம் செய்ய விரும்புவார், இயல்பாகவே அவர் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரைத் தொழுதுகொள்ள விரும்புவார். அவர் இயல்பான நிலையில், அதாவது தூய்மையான நிலையில் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததினால் இந்த விருப்பங்கள் அனைத்தும் அவருக்கு இயல்பானவையாக இருந்தன. பாவம் மனுக்குலத்தை இயல்புக்கு மாறானதாக ஆக்கிவிட்டது. ஆனால் பாவம் நுழைந்து தேவன் கொடுத்த உண்மையான குணாதிசயத்தை சிதைத்தபிறகும், மனித இருதயத்தில் சீர்கெட்ட மக்களிடையேயும்கூட தேவனைப்பற்றிய சில ஏக்கங்கள் எஞ்சி இருந்தன. அவர்கள் அவரோடு நல்லிணக்கத்துடன் இருக்கவும், அவரோடு

ஐக்கியங்கொள்ளவும், அவரை தங்கள் பாதுகாவலராகவும் நண்பராகவும் கொண்டிருக்கவுமே விரும்புவார்கள்.

தேவன் மனுக்குலத்துக்கு ஆரம்பத்திலேயே பதித்ததும், ஆதாம் இனத்தின் வீழ்ச்சியினால் முற்றிலுமாக இழக்கப்படாததுமான அந்த ஆதி வல்லமையின் மூலமாகவே அன்றி, வேறு எந்த வழியிலும் அவர்களை தம்மிடம் ஈர்ப்பதில்லை. மனுக்குலம் முழுவதும் தேவனுடைய சாயலில் இருந்து சீர்குலைந்துவிட்டது. ஆனாலும் தொழுதல், ஆராதித்தல், நீதி மற்றும் தேவனோடு இசைந்திருத்தல் ஆகியவற்றின் மீதான வாஞ்சை மற்றவர்களைக் காட்டிலும் சிலரிடம் மிக அதிகமாக உள்ளது. ஒருவர் எந்த அளவுக்கு நீதியை நேசிக்கிறாரோ, அந்த அளவுக்கு அவர் தேவனை நோக்கி ஈர்க்கப்படுகிறார். ஒருவேளை தன் சிருஷ்டிகரை கண்டுபிடித்துவிட மாட்டோமா என்று சந்தோஷத்தோடே தேடுகிறார். அவர் தேவனை கண்டுபிடிக்க விரும்புவதாலேயே அவரை தேடி, உணர்ந்துகொள்கிறார்.

**அவர்கள் எவ்வாறு இழுக்கப்படுகிறார்கள் ?**

இந்த ஈர்ப்பு அல்லது இழுக்கும் விசை நம்மில் ஒவ்வொருவருக்கும் வருகிறது என்று நாம் நம்புகிறோம். அர்ப்பணிப்பில் தேவனுக்கு நம்மை முழுமையாக கொடுத்ததற்கு முன்பே நாம் அவரிடம் வரவேண்டும் என்ற விருப்பம் நமக்கு இருந்தது. அந்த விருப்பம் நம்மில் ஏதோஒன்றை விழித்தெழுப்பியது. ஆனால் அதை விழித்தெழுப்புவதற்கு முன்பே அங்கிருந்தது. பின்பு ஏதோ ஒன்று நிகழ்ந்தது. அது நம் எண்ணங்களை தேவனை நோக்கி திருப்பியது. ஒருவேளை அது ஏதோ ஒரு பெரிய துக்கமாகவோ அல்லது ஏதேனும் ஒரு பேரிடராகவோ இருக்கலாம், அது இருதயத்தை தேவனிடம் ஈர்த்தது. அதனுடன் நம் துக்கத்தை அவரிடம் எடுத்துச் செல்லவேண்டும் என்ற உணர்வும் வந்தது. அந்த விருப்பத்துடன் "தேவன் எனக்கு செவி கொடுக்க மாட்டார்" என்ற எண்ணமும் சேர்ந்தே வந்திருக்கலாம். இது மிகவும் சரியான முடிவுதான், ஏனெனில் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று கூறிய மீட்பர் மூலமே அன்றி, தேவனை அணுக வேறு வழியே இல்லை.

தேவனை எவ்வாறு அணுகுவது என்ற அறிவுறுத்தல்கள், ரோம நூற்றுக்கதிபதியான கொர்நேலியுவுக்கு தேவைப்பட்டதுபோலவே, தேவஉதவியைத் தேடிநாடும் ஆத்துமாவுக்கும் அறிவுறுத்தல்கள் தேவை. தேவனுடைய குணாதிசயத்தைப் பற்றிய விசுவாசப்பிரமாணத்தின் தவறான சித்தரிப்புகளினால், ஆயிரமாயிரம்பேர் தேவனைவிட்டு விலகிச் சென்றுவிட்டனர் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். நம்முடைய தேவன் அன்புள்ளவர், நீதி உள்ளவர், இரக்கம் உள்ளவர் என்பதை ஜனங்கள் உணரத்தொடங்கும்போது, அவர்கள் அவரிடம் திரும்புவார்கள். சிருஷ்டிப்பின் புகைப்படக்காட்சி (Photo drama of Creation)மூலமாக சிலர் இப்போது தேவனை நோக்கி ஈர்க்கப்படுவதை காண்கிறோம். சமீபத்தில் தேவனின் மீதிருந்த பிடிப்பை முற்றிலுமாக இழந்துவிட்டதாக உணர்ந்த ஒரு வழக்கறிஞரைப் பற்றிக் கேள்விப்பட்டோம். ஆனால் அந்தக் காட்சியைப் பார்த்ததன் விளைவாக அவர் தேவனிடம் நெருங்கிவந்து தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

இயற்கையில் அழகான மற்றும் இணக்கமான எல்லாவற்றுடனும் தொடர்புடைய பரலோகத்தந்தையின் செல்வாக்கே நம்மை ஈர்க்கும் வழி என்று நாங்கள் நம்புகிறோம். தேவனிடம் திரும்பிச்செல்ல வேண்டும் என்ற வாஞ்சை நமக்கு ஏற்படும்வரை அந்த மகா பெரிய பரிந்துபேசுபவரால் வழிநடத்தப்பட நாம் தயாராக இல்லை, ஏனென்றால் நாம் அந்த பரிந்துபேசுபவரிடம் வரும்போது, அவர் மிகவும் குறிப்பாக "ஒரு நிபந்தனையின் பேரில்தான் நான் உங்களை ஏற்றுக்கொள்வேன்" என்று கூறுகிறார். அந்த நிபந்தனை என்னவென்றால், நாம் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றவேண்டும்(மத்தேயு **16:24)** என்று அவர் கூறுகிறார். ஆகவே யாராவது தேவனை நோக்கி ஏதேனும் ஒரு ஈர்ப்பைக் கொண்டிருக்கவில்லையென்றால், அவர்களுக்கு அந்த குறுகலான வழியைப் பற்றி சொல்வது ஞானமுள்ளதாக இருக்காது.

பிதாவால் இழுக்கப்படுதல், அதாவது எல்லா இடங்களிலும் நிலைத்திருக்கும் அந்த ஈர்ப்புக்கும், வேதத்தில் தேவ ஆவி என்று அழைக்கப்படுவதற்கும் இடையே தெளிவான வேறுபாட்டை நாம் காண்கிறோம். அந்த தேவனுடைய ஆவி தேவ புத்திரர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. "எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராக இருக்கிறார்கள்"**(ரோமர் 8:14)**. அந்த ஆவி அவர்களைப் பற்றிக்கொண்டு பல்வேறு வழிகளில் அவர்களை வழிநடத்துகிறது. சில சமயங்களில் அவர்களுக்கு சொத்துக்களை கொடுப்பதன்மூலமும், சில சமயங்களில் அவற்றை அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்வதன்மூலமும், சில சமயங்களில் நோய் வர அனுமதிப்பதன்மூலமும் வழிநடத்துகிறது. தேவ புத்திரர்களின் இந்த அனுபவங்கள் கிருபையிலும் அறிவிலும் அன்பிலும் வளர அவர்களுக்கு உதவுகின்றன. அதனால் அவர்கள் ஆவிக்குரிய தளத்தில் உள்ள நிலைமைகளுக்கு தகுதியுள்ளவர்களாக்கப்பட்டு, தயாராகிறார்கள்.

**எல்லா மனுஷர்மேலும் ஊற்றப்படும் ஆவி**

ஆயிரவருட அரசாட்சியின்போது காரியங்கள் இப்போது இருப்பதைவிட சற்று வித்தியாசமாக இருக்கும். பூமிக்குரிய ராஜ்யத்தின் நிலையில் கிறிஸ்துவுக்கு பிரதிநிதிகள் இருப்பார்கள். அவர்கள் மூலமாக தேவனுடைய வார்த்தை ஜனங்களைச் சென்றடையும். அப்போது எத்தனைபேர் தேவனிடத்தில் இழுக்கப்படுகிறார்களோ, அத்தனைபேரும் தங்களை அர்ப்பணிப்பதன்மூலம் அவரோடு ஐக்கியங்கொள்ளும் பாக்கியத்தைப் பெறுவார்கள். சபையானது

இப்போது ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதுபோலல்லாமல், அவர்கள் ஆசீர்வாதம் என்ற அர்த்தத்தில் தேவனுடைய ஆவியைப் பெறுவார்கள்.

முற்பிதாக்கள் மேசியாவின் ராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாக இருப்பார்கள். இருப்பினும் கிறிஸ்துவே (தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து) மகிமையில் இருக்கும் மாபெரும் போதகராக இருப்பார். அவரிடமிருந்தே அனைத்து போதனைகளும், இந்த பூமிக்குரிய பிரதிநிதிகளான முற்பிதாக்கள் வழியாக வரும். ஜனங்கள் தேவனுடைய மகிமையான குணாதிசயத்தைப் பற்றிய உண்மையான, மெய்யான அறிவைப் பெறத்தொடங்கும்போது, தாங்கள் எவ்வளவு தாழ்ந்தவர்கள் என்பதை உணரத் தொடங்குவார்கள். அந்த நிலையில் அவர்கள் அறிவுறுத்தல்களை, போதனைகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள்.

இருப்பினும், அறிவுரைகளை பெறும்படி யாரும் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள். ஆனால் தேவனுடைய ராஜ்யத்துக்கு இசைவாக இல்லாத எவர்மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். அந்த ராஜ்யத்தின் கீழ்நடக்கும் பூமிக்குரிய நடவடிக்கைகளைப்பற்றி தீர்க்கதரிசி சகரியா இவ்வாறு கூறுகிறார் : ''பூமியின் வம்சங்களில் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ, அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை'' (சகரியா 14:17). மழை என்ற உருவகமான வார்த்தையை விளக்கிக் கூறினால், அத்தகைய தேசங்களின்மீது தெய்வீக ஆசீர்வாதம் இருக்காது என்பதே இதன் கருத்தாயிருக்கும் என்று நாம் புரிந்துகொள்கிறோம். மழை இல்லாவிட்டால் அங்கு கனிதருதல்(பலன்கள்) இருக்காது. ஆனால் கர்த்தரோடு இசைவுக்குள் இருப்பவர்கள்மீது ஆசீர்மழை பொழியும்.

ஜனங்கள் தேவனோடு இசைவுக்குள் வரும்போது, அவர்கள் தங்கள் ஜீவியத்தையும் சரீரத்தையும் அவருடைய ஊழியத்திற்காக அர்ப்பணிப்பார்கள். அப்போது அவர்கள் ''தங்கள் சிந்தையிலும் சரீரத்திலும் ஆசீர்வாதங்களைப் பெறத்தொடங்குவார்கள். இந்த வகையில் அவர்கள் கர்த்தருடைய ஆவியை –அவருடைய சிந்தையின் ஆவியை அதிகமாகப் பெறுவார்கள். இவ்வாறு அவருடைய சத்தியத்தின் மூலமாகவும், அக்காலத்தின் தெய்வீக நியாயத்தீர்ப்புக்கள் மூலமாகவும் கர்த்தர் மாம்சமான யாவர்மீதும் தம்முடைய ஆவியைப் பொழிந்தருள்வார்''(யோயேல் 2:28). எந்த அளவிற்கு அவருடைய ஆவியை அவர்கள் பெறுகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் புத்திரத்துவ மனப்பான்மைக்கு வருவார்கள். இருப்பினும், அந்த நிலையிலும் அவர்கள் புத்திரன் என்ற சொல்லின் முழுமையான அர்த்தத்தில் புத்திரர்களாக இருக்கமாட்டார்கள். திருச்சபையினராகிய நாமும் இப்போது முழுமையான அர்த்தத்தில் புத்திரர்கள் அல்ல என்றும், நமது உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடைந்தபின்னரே நாம் உண்மையான புத்திரர்களாக இருப்போம் என்றும் சொல்லலாம். எனவே ஆயிரமாண்டு ஆட்சிக்காலத்தில், மேசியாவின் ராஜ்யத்திலுள்ள தெய்வீக ஏற்பாட்டுக்கு ஜனங்கள் தங்களை இசைவுபடுத்திக்கொள்ளும்போது, அவர்கள் புத்திரன் என்ற தகுதியின் தரத்திற்கு மெல்ல மெல்ல நெருங்கி வருவார்கள். அந்த ஆயிரமாண்டு காலத்தின் முடிவில், ஆதாம் பரிபூரணமாக இருந்தபோது அவரிடம் இருந்த அதே மனநிலையை (சிந்தையை) அவர்கள் அடைந்திருப்பார்கள். இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அவர்கள் கிறிஸ்து மூலமாகவும், அவரோடு இணைந்த சபையின் மூலமாகவும் பெற்றுக்கொள்வார்கள்.

**சபையில் ஆவியின் பணி**

நமது கர்த்தர் இந்த உலகத்திற்கு நித்திய ஜீவனை வழங்குவதால், அவர் ''நித்தியப் பிதா'' என்று அழைக்கப்படுகிறார்(ஏசாயா 9:6). கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின்போது, விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ள அனைவரும் அவருடைய பிள்ளைகளாக மாறுவார்கள். பின்னர், அந்த மேசியாவின் ராஜ்யத்தின் இறுதியில் கிறிஸ்துவின் பிள்ளைகள் தங்களுடைய ஆதித்தகப்பனுக்கு (Grand father)அறிமுகப்படுத்தப்படுவார்கள், அவர்கள் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் குமாரர்களாக இருக்கப்போவதால், பரலோகத் தகப்பன் அவர்களுக்கு ஆதித்தகப்பனாக இருப்பார். அதன்பிறகு முழு உலகமும் கிறிஸ்துவின் குமாரர்களாக, தேவனுடன் மீண்டும் இசைவுக்குத் திரும்பும்.

ஆனால் இந்த சுவிசேஷயுகக் காலத்தில் தேவன் இவ்வுலகத்தின்மீது நேரடியாக செயல்படுவதில்லை. இவ்வுலகில் காணப்படும் இயற்கையான அழகுகள் அனைத்தும், தேவனின் வல்லமை ஒரு பொதுவான முறையில் செயல்படுவதால் விளைந்தவை. நமது பாடத்தின் ஆதார வசனங்கள், தேவனின் அந்த பொதுவான வல்லமை அல்லது ஆவி செயல்படுவதைப் பற்றி குறிப்பிடவில்லை. மாறாக மனிதர்களின் இருதயங்களில் அவர் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றியே குறிப்பிடுகிறது. புதிய ஏற்பாட்டு எழுத்துக்களில் இது, தங்களை முழுமையாக அர்ப்பணித்து, அதன்மூலம் பரிசுத்தஆவியினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக, கிறிஸ்துவுக்குள் ''புதிய சிருஷ்டிகளாக'' ஆனவர்களையே குறிப்பிடுகிறது. அப்படிப்பட்டவர்கள் அனைவரும் தெய்வீகப் பராமரிப்பைப் பெறுகிறவர்களாக இருக்கிறார்கள். வேத வசனங்கள் சத்திய ஆவியை, பிதாவின் ஆவியை, கிறிஸ்துவின் ஆவியைப் பற்றி பேசுகின்றன. இவை அனைத்தும் ஒரே பொருளையுடைய சொற்களாயிருந்து, இவை தேவனுடைய ஜனங்கள்மீது செயல்படுத்தப்படும் தெய்வீக செல்வாக்கையே பிரதிபலிக்கின்றன. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிற நாம், அப்போஸ்தலர் அறிவுறுத்துவதுபோல, பூரணமடையவேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியை அடையவேண்டும். ''முதலாம் உயிர்த்தெழுதலில்'' நாம் பிறக்கும்வரை இந்த முன்னேற்றம் தொடரவேண்டும். அந்த

உயிர்த்தெழுதலில் மட்டுமே பூரணநிலை அடையப்படும், அதற்கு முன்பு அல்ல. இதற்கிடையில், அந்த உயிர்த்தெழுதலுக்கு தயாராகும்பொருட்டு, ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி நமக்குள் அவசியம் ஏற்படவேண்டும்.

**ஆவியின் நிலைகளுக்கு தயாராகுதல்**

நம் பாடத்தின் ஆதாரவசனத்தில், இந்த ஜீவன் நிலைமையை நாம் எப்படி அடைவது, ஆவியின் பிறப்பை ஏற்றவேளையில் அடைய எப்படி தயார்ப்படுத்துவது ? என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஆவியினாலேயே அல்லது தேவ வல்லமையினாலேயே அப்படிப்பட்ட வளர்ச்சியை அடையமுடியும் என்று அவர் கூறுகிறார். இந்த ஆவி பல்வேறு வழிகளில் இயங்குகிறது. உதாரணமாக , தேவனுடைய செய்தி சபைக்கு பயன்படுத்தப்படுகிறது. ஆகவே தேவனுடைய திட்டத்தை அதிகமாகப் புரிந்துகொள்ளும்போது, நம் இருதயங்களில் அந்த வல்லமை பெரிதாயிருக்கும் ; மேலும் தெய்வீக சித்தத்துக்கான நம் அர்ப்பணிப்பும் ஆழமாயிருக்கும்போது அதிக இரக்கத்தை நாம் அடைந்து, தெய்வீக விருப்பத்தை நாம் அடைந்து, தெய்வீக விருப்பத்தை செய்வதற்கான நம் ஆவலையும் அதிகம் அடைந்திருப்போம்.

நம் இருதயங்களுக்குள் நடைபெறும் மாற்றம், மனிதர்களாலோ, மனிதர்களுடையதோ அல்ல. தேவன் நம்மில் இந்த வேலையைத் தொடங்கினார். எனவே அவர் நமக்குக் கொடுத்த செய்தியின்மூலம் நம் இருதயங்களில் தொடங்கின வேலையை முடிக்க, நாம் அவரை நோக்கிப் பார்க்கவேண்டும். எனவே நாம் ஜெபத்தில் அவரிடம் செல்லவும், அவரது வார்த்தையைப் படிக்கவும், அந்த வார்த்தையின் அர்த்தத்தை அறிந்து, இவ்வாறு நம் ஜீவியத்தில் அதை வெளிப்படுத்தும் ஆற்றலை அடைகிறோம். நமது சரீரங்களை வலுப்படுத்த நமக்கு உணவு தேவைப்படுவதுபோல், புது சிருஷ்டியை வலுப்படுத்த ஆவிக்குரிய உணவு நமக்கு தேவைப்படுகிறது. அவருடைய சித்தத்தை முன்பைவிட சிறப்பாகப் புரிந்துகொண்டு, ஆவிக்குரிய பலத்தை அடையவே இந்த ஆவிக்குரிய உணவை தேவன் அபரிதமாய்க் கொடுத்திருக்கிறார்.

பரிசுத்தஆவியின் மூலம் தேவனுடைய இந்த செயல்பாடு படிப்படியாக நிகழுகிறது. நமது முந்தைய நம்பிக்கைகளின் பிழைகளால் நாம் மிகவும் மறைக்கப்பட்டுள்ளதால், தேவனுடைய ஆழமான விஷயங்களை முதல் பார்வையிலேயே காண நாம் தயாராக இல்லை. ஆகவே இதே விலையேறப்பெற்ற விசுவாசத்தில் இருப்பவர்களை சந்திக்கவும், கற்கவும் நமக்கு அவசியமுள்ளது. இவ்வாறு, ஆழமான காரியங்களைக் காண நாம் உதவிபெறுகிறோம்.

**நம்மைக் குறித்த தேவ சித்தம்**

இந்த விஷயத்தை நாம் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளும்போது, இந்தப் பாடத்தின்மீதான நம் சிந்தனை படிப்படியாக மாறுகிறது. நாம் ஆரம்பத்தில் தேவனிடம் வந்தபோது, நம்மைக் குறித்த தேவசித்தம் –நாம் நம்மை அனுபவித்து, நல்ல ஒழுக்கமான ஜீவியம் ஜீவித்து, நம் சரீரங்களை பராமரித்தலே என்று எண்ணியிருந்தோம். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால், நமக்கு மிகுதியாக இருக்கவேண்டும். தேவனுடன் இணக்கமாக ஜீவிக்க முடியாதவர்கள் அழிக்கப்படுவார்கள் என்றும் எண்ணியிருந்தோம். இது சுபாவ மனிதனின் சிந்தனையாக இருக்கும். சுபாவ மனிதனால் தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைக் காணமுடியாது. ஏனெனில் அவைகள் ஆவிக்குரிய விதமாய்ப் பகுத்தறியப்படுகின்றன என்று அப். பவுல் கூறுகிறார். இது தேவன் நம்மைக் கையாளும் விதம் அல்ல.

பூமிக்குரிய நிலையை எவ்வாறு அழிப்பது, இது எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்பதை நமக்கு காண்பிப்பதன்மூலம், நம் பரலோகத்தந்தை ஆவிக்குரிய விஷயங்களுக்கு நம்மைத் தயார்ப்படுத்துகிறார் என்பதை நாம் படிப்படியாகப் புரிந்துகொள்ளத் தொடங்குகிறோம். இது நமக்கு ஒரு புதிய சிந்தனையாயிருப்பதால், பூமிக்குரிய நிலையை நான் ஒடுக்கி அழிக்கவும், மரிக்கச்செய்யவும் தேவன் என்னிடத்தில் விரும்புகிறாரா ? நான் என் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், சுபாவ வாழ்க்கை வாழவும் முயலவேண்டாமா ? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்கிறோம் .

சுபாவக் காரியங்களைப் பின்பற்று ; மற்றவர்களுடைய உரிமையில் தலையிடாதவரை, உன் விருப்பப்படி செய் என்று சுபாவ மனிதன் கூறுகிறான். ஆனால் புதுசிருஷ்டியோ, மாம்சத்தின் இயல்பான விருப்பங்களுக்கு செவிசாய்க்கக்கூடாது. நம்மை மாற்றவும், நம் சிந்தையைப் புதுப்பிக்கவும், இறுதியில் அவர் வாக்குத்தத்தம் செய்ததை நமக்கு அளிக்கவும் நாம் கர்த்தரிடத்தில் கேட்டிருக்கிறோம். எனவே நாம் உலகத்துக்குரியோர் அல்ல, மேலும் நமது பாதை வேத வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருக்கவேண்டும்.

**புது சிருஷ்டியின் வேலை**

சிலர் நினைத்ததுபோல், நம் சரீரங்களை நாமே அழிப்பது என்று நமது பாடத்தின் ஆதார வசனம் அர்த்தப்படுத்துவதில்லை. வரலாற்றின்படி, கடந்த காலங்களில் தீவிரமான ஆத்துமாக்கள் தங்கள் சரீரங்களில் கடுமையான வலி உண்டாகும்வரை சவுக்கடிகளைப் பயன்படுத்தினபிறகு, முடியுள்ள மேலங்கிகளை அணிந்திருந்தனர். சில சமயங்களில் அந்த சரீர ரீதியான சித்திரவதை செய்து தோல் புண்களாகும்வரை சென்றுள்ளனர். மற்றவர்களோ, கீழே படுத்தநிலையில், தங்கள் சரீரங்கள்மீது பிறர் நடந்துசெல்லும்படி துன்புறுத்த முயன்றுள்ளனர். இக்காரியங்களை செய்பவர்கள், அவ்வாறு செய்வதற்கு ஒரு நோக்கம் இருக்கவேண்டும், அதை நாம் கேள்விகேட்கமுடியாது, அதை ஒரு மோசமான நோக்கமாகவும் நாம் கருதவும் முடியாது. இருப்பினும், இதுபோன்ற காரியங்களைச் செய்பவர்கள் நம் பாடத்தின் ஆதார

வசனம் கூறுகிற அர்த்தத்தைப்பற்றிய தவறான கருத்தைக் கொண்டுள்ளனர் என்று நாங்கள் நம்புகிறோம்.

''மாம்சத்தின் செய்கைகளை மரிக்கச்செய்யுங்கள்'' என்ற வாக்கியத்தின் மூலம், தேவனுடைய பிள்ளைகள் தேவஆவிக்கு இசைவில்லாத தங்களிலுள்ள எல்லா சுபாவப் பழக்கவழக்கங்களையும், தங்களுக்குள் அழிக்கவேண்டும் என்று வேத வசனங்கள் அர்த்தப்படுத்துகின்றன. நாம் அனைவரும் பிறப்பிலேயே பாவிகள் என்று வேதாகமம் அறிவிக்கிறது. ஆகவே நாம் நம் விழுந்துபோன சுபாவத்தின் நெகிழ்ந்த தன்மையைப் பின்பற்றக்கூடாது. நாம் செல்லவேண்டிய வழியில் நம்மை வழிநடத்தும் தேவனுடைய ஆவியாகிய பரிசுத்தஆவியை நாம் பெற்றிருக்கவேண்டும். புதிய சிந்தையால் உள்வாங்கப்படாத சரீரத்தின் ஒவ்வொரு மயக்கத்தையும் நாம் மரிக்கச் செய்யவேண்டும்.

சாவுக்கேதுவான சரீரத்தின் சில இயல்புகள் அழிக்கப்படவேண்டியவை. எனவே எல்லா நேரங்களிலும் அவற்றிற்கு எதிராகப் போராடவேண்டும். பின்னர், நீதியின் ஊழியத்தில் பயன்படுத்தப்படவேண்டிய மற்ற குணங்களும் உள்ளன. ஒரு காலத்தில் நாம் பாவத்தின் கீழ் இருந்தோம், ஆனால் தற்போது புதிய சிந்தை நமக்கு இருக்கிறது. இனிமேல் பழைய சிருஷ்டியைப் பூமிக்குரிய பாத்திரமாக மட்டுமே கருதவேண்டும். பரிசுத்தஆவியின் வழிகாட்டுதலின்கீழ், இதை எப்படிச்செய்வது என்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த செயல்முறையின் முதல்படி, நம் சரீரத்தை மரித்ததாகக் கருதுவதாகும். பாவத்திற்கும், பூமிக்குரிய சுபாவத்தின் அனைத்திற்கும் மரித்ததாகக் கருதினபிறகு, உயிரோடிருக்கிறது என்ற அர்த்தத்தில் அதை எண்ணி , தேவனுடைய ஊழியத்தில் கொண்டுவரக்கூடிய அனைத்து மனப்பான்மைகளையும் பண்புகளையும், விழித்தெழச்செய்யவும் எழுப்பவும் உயிர்ப்பிக்கவும் செய்வது இரண்டாவது படி.

**ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டோரின் அன்றாட போராட்டம்**

நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டபிறகு, நாம் புது சிருஷ்டிகள். இந்த வார்த்தையின் அர்த்தத்தின்படி நாம் நம் சரீரத்திலிருந்து விடுபட்டுள்ளோம். நமது மனித சுபாவத்தின் எந்தப் பகுதிகள் தேவனுக்கும் அவருடைய சித்தத்துக்கும் எதிராக இருக்கின்றன என்று கண்டறிந்தவுடன், அவற்றை நாம் அழித்து, மரிக்கச்செய்யவேண்டும். இந்த செயல்முறை, பழைய சுபாவத்துக்கு எதிராகப் போராடுகின்ற தொடர்ச்சியான யுத்தமாக இருக்கிறது. அப்போஸ்தலர் இதை, மாம்சத்துக்கும் ஆவிக்கும் இடையிலான போர் என்று தெளிவாகக்கூறுகிறார். ஆனால் சட்டப்படி மரித்திருக்கிற சில கூறுகளுக்கு எதிராகப் போர் புரியும்போது, மாம்சம் உண்மையாகவே மரிக்கவில்லை என்பதை நாம் காண்கிறோம். ஆனால் நாம் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்போமானால் தேவன் மாம்சத்தை அங்கீகரிக்கமாட்டார், நாமும் அங்கீகரிக்க மாட்டோம். புதிய சிருஷ்டியை மட்டுமே நாம் அங்கீகரிப்போம்.

இந்தப் போராட்டம் தினசரி நடக்கும் ஒன்று. நம் எல்லா அவயவங்களும் தேவனுடனும் அவருடைய சித்தத்தடனும் இணக்கமாக இருக்கவேண்டும். தெய்வீகத் தரநிலையிலிருந்து எல்லாவற்றையும் பார்க்க நாம் முயற்சிசெய்யவேண்டும். இந்த அழிவுக்குரிய சரீரங்களை நாம் எப்போதாவது பூரணப்படுத்துவோம் என்பது இதன் கருத்து அல்ல, ஆனால் நாம் பூமியில் ஜீவிக்கும்போது இந்த சரீரங்களோடு தொடர்புடையவர்களாக இருக்கையில், புதிய சிருஷ்டியின் சித்தத்தைச் செய்ய சரீரத்தை இயக்குவது நம் கடமையும், நம் சிலாக்கியமுமாக உள்ளது.

நமது சரீரங்கள் பாவத்துக்கு அடிமைகளாயிருந்தன, இப்போது நாம் ,''இந்த சரீரத்தைக் கட்டுப்படுத்த எனக்கு உரிமை உண்டு. நான் ஒரு புது சிருஷ்டி; ஆனால் இது என் சரீரம். இந்த சரீரத்தின்மீது என் வல்லமையை அதிகரித்து, அதை கர்த்தருடைய ஊழியத்தில் மேலும்மேலும் பயன்படுத்துவேன். என் சரீரம் உயிருடன் இருக்குமா என்று பார்க்க கோபுரத்தின்மீதிருந்து குதித்து, முட்டாள்தனமான செயல்களைச் செய்வது என் நோக்கமல்ல; ஆனால் பரிசுத்தஆவியின் வழிகாட்டுதலின்கீழ், புதிய எஜமானரின் ஊழியத்தில் என்னால் முடிந்தவரை அதிலிருந்து வெளியேறவேண்டும் '' என்று கூறுகிறோம்.

இவையனைத்தும் நம் குணலட்சண வளர்ச்சிக்கு அவசியம். தேவன் சபையை மகிமை, கனம், அழியாமை மற்றும் கிறிஸ்துவோடு கூட்டு வாரிசுமைக்கு அழைத்துள்ளார். நாம் ஜெயங்கொள்வோராக நிரூபிக்காவிடில் இவ்வளவு பெரிய உயர்வுக்கு நாம் ஒருபோதும் தயாராக மாட்டோம். தான் இருப்பதிலிருந்து வேறுபட்டதாக இருக்க விரும்புவதாகச் சொல்வதால் மட்டும், இந்த உயர்ந்தநிலை எந்த மனிதனுக்கும் வழங்கப்படாது. மாறாக, பயத்துடனும் நடுக்கத்துடனும் நமது சொந்த இரட்சிப்பை நிறைவேற்றவேண்டும். தேவனுக்கு முழு அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துபவர்கள், தெய்வீக சித்தத்துக்கு முரணான எல்லாவற்றையும் அகற்றுவதன் மூலம் இதை நிரூபிக்கவேண்டும். இவர்கள் குணநலனை வளர்க்க முற்படும்போது, ''அவருடைய சத்துவத்தின் வல்லமையில் பலப்பட்டு'' வளர்ச்சியடைவார்கள். இறுதிவரைக்கும் இந்த வழியை பின்பற்றுபவர்களே, அவர் அழைக்கும் வகுப்பார். மேலும் அவர்கள் மட்டுமே, ''முற்றிலும் ஜெயங்கொண்டவர்களுக்கு'' அளிக்கப்படும் ஸ்தானத்துக்கு தகுதியானோராக நிரூபிப்பர்.

**உபத்திரவத்தில் சந்தோஷப்படுதல்**

உலகம் தங்கள் சரீரங்களை தேவசித்தத்துக்கு இசைவாகக் கொண்டுவர ஆயிரம் வருடங்களை அடைந்திருக்கும். கர்த்தருக்கு முழுமையாக உண்மைத்தன்மையோடு இருக்கும் இடத்தை படிப்படியாக மனுக்குலம் வந்தடையும். கல்லான இருதயம் அகற்றப்படும். கீழ்ப்படிதலின்மூலம் இந்த நிலையை அடைபவர்களுக்கு தேவன் நித்திய ஜீவனை அளிப்பதில் மகிழ்ச்சியடைவார்.

ஆனால் சபையைப் பொருத்தவரை அது வேறுபட்டது. சுவிசேஷயுகத்தில் தங்கள் ஜீவியங்களை அவரது ஊழியத்துக்கு கையளிக்க விருப்பங்கொண்டோரை கர்த்தர் தெரிந்தெடுத்து, வழிநடத்திவருகிறார். அவர்கள் அவரை நேசிக்கிறபடியால், அவர்களை தம்முடைய பரிசுத்தவான்கள் என்று அழைப்பதில் அவர் மகிழ்ச்சியடைகிறார். இந்த வகுப்பாருக்கு நன்மையான எதையும் வழங்காதிரார். முழுமையாக தங்களை அர்ப்பணித்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பவர்கள், கிருபையின்மேல் கிருபையடைந்து, மாம்சத்தின்படி ஜீவிக்காமல் ஆவியின்படி ஜீவிப்பார்கள். அவரை நேசிப்போர்க்கென தேவன் ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. இந்த வகுப்பாருக்கே தேவன் தம்முடைய மிகச்சிறந்தவற்றை வழங்கியுள்ளார்.

"நாம் மிகுந்த உபத்திரத்தின் வழியாய் தேவ ரஜ்யத்திற்குள் பிரவேசிக்கவேண்டும்" என்று இந்த வகுப்பாருக்கே வேதம் அறிவிக்கிறது. இவர்கள் கடினமான காலத்தில் இருக்கிறார்கள் என்று சிலர் கூறலாம். ஆனால் மாம்சம் அழிக்கப்பட்டு, மரித்துப்போகும் இந்த அனுபவங்கள் அனைத்திலும் ஒருவர் சந்தோஷமடையக்கூடிய வளர்ச்சியின் அளவை எட்டமுடியும் என்று கிறிஸ்துவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர். இது நாம் மற்றவர்களிடமிருந்து மிகவும் வித்தியாசமாக இருப்பதால், அவர்கள் விரும்பாததை நாம் விரும்புகிறோம் என்று அர்த்தமல்ல, மாறாக ஏன் இந்த உபத்திரவம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான காரணத்தை நாம் காண்கிறோம். இது நமக்கான தேவனுடைய திட்டம் என்பதை நாம் அறிவோம். மாம்சத்தின் சித்தத்தை, மாம்சத்தின் காரியங்களை அழிப்பதன் இந்த சான்றுகளால், நாம் நம் பரலோகப்பிதாவின் தயவில் வளர்ந்துவருகிறோம் என்பதைக் காண்கிறோம்.

இவர்களின் இருதயங்களில் தேவசமாதானம் ஆளுகை செய்கிறது. இவர்களின் எல்லா நடவடிக்கைகளும் தெய்வீக மேற்பார்வையில் இருப்பதை இவர்கள் அறிவார்கள். உலகம் துன்பங்களையும் பயங்களையும் தீமையின் முன்அறிகுறிகளை அடைந்தாலும், கர்த்தரிடத்தில் நம்பிக்கைகொண்டவர்கள் உலகம் தரக்கூடாத, உலகத்தால் எடுக்கமுடியாத சமாதானத்தை அடைந்திருக்கிறார்கள். இதை உலகிற்கு நம்மால் விளக்கமுடியாது, ஏனெனில் அவர்களால் அதைப் புரிந்துகொள்ளமுடியாது.

-------

## R 5587

போ, உழை, செலவுசெய், கரைந்துபோ

தந்தையின் சித்தத்தை செய்வதே உன் மகிழ்ச்சி ;

இதுவே எஜமான் சென்ற வழி,

வேலைக்காரன் அதில் ஜாக்கிரதையாய் நடக்க வேண்டாமா ?

போ, தொடர்ந்து உழை; போதும், இங்கே இருக்கும்போது,

அவர் உன்னைப் புகழ்ந்தால் – அவர் தகுதியாய்க் கருதினால்,

உன் மனப்பூர்வமான இருதயத்தைக் கண்டு மகிழ்வார்;

அவருக்காகச் செய்யும் எந்த உழைப்பும் வீண்போகாது !

------

## R 5587

# திருச்சபையை திருநிலைப்படுத்துதல்

THE CHURCH'S ORDINATION

**ஆதார வசனங்கள் : மத்தேயு 28: 16–20; லூக் 24: 36–49.**

**"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" –மத்தேயு 28:20.**

இப்பாடம் இயேசுவின் உயிர்த்தெழுதலைத்தொடர்ந்து, 40 நாட்களில் தம் பிரசங்கங்களில் தம் சபைக்கு நியமித்த ஊழியத்துக்கான பொறுப்பு அளித்தலை அல்லது அங்கீகாரத்தைப் பற்றியது.

எருசலேமுக்கு அருகிலுள்ள எம்மாவூர் கிராமத்துக்குத் தம்முடைய இரண்டு சீஷர்களோடு பிரயாணம்செய்த மாலைவேளையில், நம் போதகரின் வார்த்தைகள், முதலாவதாக நமக்குக் கிடைக்கின்றன. அதனையடுத்து இயேசு தம் சீஷர்களைப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு சற்று முன்பு கொடுத்த பொதுவான பொறுப்பளிப்பதன் ஒரு பகுதி நமக்குக் கிடைக்கிறது.

எம்மாவூர்க்குப் பயணம் செய்ததிலிருந்தும், அதைத்தொடர்ந்து கொடுத்த தோற்றங்களிலிருந்தும் கற்றுக்கொண்ட பாடங்கள், அந்தநேரத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றின அனைவருக்கும் மிகவும் விலையேறப்பெற்றதாக இருந்திருக்கவேண்டும். மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று நான் உங்களோடிருந்தபோது (நான் இன்னும் மனிதனாகிய இயேசுவாக என் உயிர்த்தெழுதலின் மாறுதலை அடையுமுன்பு) உங்களுக்குச் சொல்லிக் கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி : எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" –லூக் 24: 44–47 என்று கூறினார்.

குறைந்தபட்சம் ஒரு மணிநேரம் வேதாகமத்தின் விளக்கத்தை, சுவிசேஷகர் சில வார்த்தைகளில் சுருக்கமாகக்

கூறுகிறார். அவர்களுடைய புரிதலின் கண்களைத் திறந்த இந்த விளக்கங்கள் என்னவென்று நமக்குச் சொல்லப்படவில்லை, என்றாலும் நம்மால் யூகிக்கமுடியும். அந்த ஆண்டில் அந்த நேரத்தில் கொல்லப்பட்ட பஸ்கா ஆட்டின் முக்கியத்துவத்தைஅவர் அவர்களுக்கு விளக்கி காண்பித்து –அந்த ஆட்டுக்குட்டிக்கான நிஜம் அவரே என்று காண்பித்தார். அவர் பஸ்காவின் உண்மையான முக்கியத்துவத்தை ஆசாரியர்கள் உட்பட லேவி கோத்திரத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் நிழலில் கடந்துபோயினர். இந்த முதற்பேறானவர்களுக்கான நிஜமாக, முதற்பேறானவர்களின் சபை உள்ளது. இவர்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன என்ற உண்மையான முக்கியத்துவத்தை அவர்களுக்கு விளக்கினார் . நிஜமான லேவியரும், ராஜரீக ஆசாரியக் கூட்டத்தாராகப் போகின்ற இயேசுவின் பின்னடியார்கள் அனைவரும், மேசியாவின் ராஜ்யத்தில் உலகை மேம்படுத்தும் பணியில் ஊழியக்காரர்களாக இருப்பர்.

நிஜமான ஒப்புரவாக்கும் நாளையும், உன்னதமான பலிகளையும் குறித்து சில ஆலோசனைகளை குரு அவர்களுக்குக் கொடுத்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. அவரே அந்த உன்னதமான பலிகளைத் துவங்கி, அவரது சீஷர்களிடத்தில் தொடர்ந்து நடைபெறும், அந்த பலிகள் முடிவடையும்போது மேசியாவின் ஆயிரவருட அரசாட்சியில் ஒப்புரவாக்கும் ஆசீர்வாதங்கள் பிரதான ஆசாரியரிடமிருந்து பூமி முழுவதும் சென்றடையும்.

**வாக்களிக்கப்பட்ட உன்னதத்திலிருந்து வரும் பெலன்**

நம் குருவால் வெளிப்படுத்தப்பட்ட உயர்ந்த திட்டத்தின் அம்சங்கள் எதுவாயிருந்தாலும், அவருடைய மாணவர்கள் ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்ற உறுதி நமக்கு உள்ளது. தங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட எஜமானரையும், அவரது ஆலோசனைகளையும், அவரது அறிவுறுத்தல்களையும் இழந்துவிட்டோம் என்ற அவர்களுடைய துயரம் மறைந்துவிட்டது. அவை அவர்களுடைய ஆரம்ப எண்ணங்களாக இருந்தன. ஆனால் இப்போது, இந்த அறிவொளியின்மூலம், அவர்களுடைய இருதயங்கள் புத்துயிரூட்டும் அறிவின் உத்வேகத்தால் அனலாயின. தேவதிட்டத்தில் அவர்கள் ஒருபோதும் கனவு கண்டிராத உயரங்கள், ஆழங்கள், நீளங்கள் மற்றும் அகலங்களைக் கண்டார்கள். தேவ வாக்குத்தத்தங்களால் ஈர்க்கப்பட்ட எல்லா நம்பிக்கைகள் மற்றும் வாய்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு இயேசுவின் மரணம் அவசியம் என்பதை அவர்கள் கண்டார்கள். அவரோடு துன்புறுவதற்கு மட்டுமல்ல, மகிமைப்படுத்தப்படுவதற்கும் தாங்கள் பாக்கியம் பெற்றவர்கள் என்பதை அவர்கள் கண்டார்கள்.

அத்தருணத்தில், குருவின் செய்தியின் இறுதிப்பகுதி; ''என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்'' என்பதாயிருந்தது(யோவான் 24:49). கிறிஸ்துவின் மணவாட்டியாகிய திருச்சபை, அவர்களுடைய தலையாகிய இயேசுவிடமிருந்து பரிசுத்தஆவியைப் பெறவேண்டும் என்பதற்கு பலதரப்பட்ட முன்அடையாளங்களில் பிதா வாக்களித்திருந்தார். உதாரணமாக, இயேசுவுக்கு முன்னடையாளமாகக் குறிப்பிட்ட ஆரோனின் தலைமீது ஊற்றப்பட்ட பரிசுத்த எண்ணெய், ஆரோனின் சரீரத்தின்மீது கீழிறங்கினது, திருச்சபையை அபிஷேகம் பண்ணுவதற்கு அடையாளமாக காண்பிக்கப்பட்டது.

திருச்சபையின் தெய்வீக ஏற்றுக்கொள்ளுதலைப் பற்றிய இந்த வாக்குத்தத்தம் மிக முக்கியமானது. இது இல்லாமல் சீஷர்களுக்கு எந்த பணிநியமனமும் இல்லை, மேலும் தேவனுக்கு தூதுவர்களாகவும் முடியாது. இயேசு உண்மையில் பன்னிரெண்டுபேரை அனுப்பினார். பின்னர் எழுபதுபேரை அனுப்பினார். ஆனால் அவர்கள் அவருடைய தனிப்பட்ட பிரதிநிதிகளாயிருந்தனர், அவர்களுக்கு அவரது சொந்த ஆவியை, அவரது சொந்த வல்லமையை கொடுத்திருந்தார். இதனால் அவர்கள் அற்புதங்களை நிகழ்த்தினர், பிசாசுகளைத் துரத்தினர். ஆனால் அவர்கள் ஒருபோதும் பிதாவினால் அறியப்படவில்லை. ''இயேசு இன்னும் மகிமைப்படாதபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை''(யோவா7:39). இந்த பரிசுத்தஆவியில் ஜெநிப்பிக்கப்படவும், பரிசுத்தஆவியில் அபிஷேகம் பண்ணப்படவும் அவர்கள் காத்திருக்கவேண்டியிருந்தது. இது மட்டுமே அவர்களை தெய்வீக சேவைக்கு –தேவனின் தூதுவர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இருப்பதற்கு ஊக்குவிக்கவோ அல்லது தகுதிப்படுத்தவோ முடியும்.

**"இதோ நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்''**

கர்த்தருடைய செய்தியை அறிவிக்கும்படி அவரது சீஷர்களுக்குக் கொடுத்த பணி நியமனமும், அவர்களுக்கு அளித்த இறுதி ஆசீர்வாதமும் நமக்கு அதிக ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. இது மத்தேயுவின் சுவிசேஷத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவர் நியமித்ததன் மூலம் பதினோருவரும் கலிலேயாவில் உள்ள மலையில் அவரை சந்தித்தனர். சில கணங்கள் மட்டுமே அவர் அவர்களுக்குத் தோன்றினார். அவர்கள் தொழுதுகொண்டனர், சிலர் முழுமையாக நம்பினர், மற்றவர்கள் தயங்கினர். அப்படி சந்தேகப்படுகிறவர்களை நம்பவைப்பதற்காக இயேசு நாற்பது நாட்கள் தங்கியிருந்தார். பதினோருபேரையும் நம்பவைக்கும் வேலையை அவர் முழுமையாக நிறைவேற்றினார் என்பதில் நாங்கள் உறுதியாயிருக்கிறோம். ஏனென்றால் பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்திற்காக மேல்அறையில்

காத்திருந்த அவர்கள் அனைவரும் ஒரே இருதயத்துடனும், ஒரே மனதுடனும் இருந்தனர்.

இயேசு அவர்களுக்கு அருகாமையில் வந்து, பரலோகக் காரியங்கள் மற்றும் பூலோகக் காரியங்களில் அவருக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டதாக அறிவித்தார். இதை அவர்கள் உணரமுடியாவிட்டால் உலகத்திற்கு முன்பாக அவரை முறையாக பிரதிநிதித்துவப்படுத்துவது அவர்களுக்கு சாத்தியமில்லாதிருக்கும். அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது அவர் இந்த வல்லமையையும், அதிகாரத்தையும் அடைந்திருக்கவில்லை. அவர் அப்பொழுது தம் விசுவாசத்தின் உண்மைத்தன்மையைப் பொருத்தவரை, மரணபரியந்தம் சிலுவையின் மரணபரியந்தமும் சோதனையில் இருந்தார். ஆனால் அவருடைய உண்மைத்தன்மையை அவர் நிரூபித்தபிறகு, பிதா அவரை மரித்தோரிலிருந்து மகிமையின் முழு வல்லமைக்கு எழுப்பினார். இவ்வாறு வல்லமையுடன் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டதன்மூலம், அவர் தேவகுமாரன் என்று அறிவிக்கப்பட்டார். அவர் இனி மனித வரம்புகளுக்குட்பட்டவராகவோ, அல்லது மரண உடன்படிக்கையின் வரம்புகளுக்குட்பட்டவராகவோ இல்லை என்பதை தம் சீஷர்கள் அறியவேண்டும் என்று அவர் விரும்பினார். அந்தவேலையை அவர் முடித்திருந்தார். ஆசீர்வாதங்களுக்குள் வெகுமதிக்குள் அவர் நுழைந்திருந்தார். அவர் மாற்றத்தை அடைந்திருந்து, இப்பொழுது பூமிக்குரிய காரியங்களில் மட்டுமல்ல, பரலோகக் காரியங்களைப் பொருத்தவரையிலும் அனைத்து அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்.

பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளும் அவரை வணங்குவார்கள் என்று தீர்க்கதரிசனம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்க்கதரிசனம் விரைவில் நிறைவேறத்தொடங்கும் நிலைக்கு அவர் நுழைந்தார். அவர் உன்னதங்களுக்கு ஏறிச்சென்று, அங்கு தேவதூதர்கள் அனைவரும் அவரை வணங்கி, பிதாவால் உயர்த்தப்பட்ட ஒருவராக அவருக்கு செவிசாய்த்தனர். பூமியிலுள்ள அனைவரும் அவரை வணங்கவேண்டும் என்ற வாக்குத்தத்தத்தின் பிற்பகுதி இன்னும் நிறைவேறவில்லை. அத்தகைய அங்கீகாரத்திற்கான நேரம் அவருடைய ஆயிரமாண்டு மேசியானிய ராஜ்யத்தின்போது இருக்கும். இப்போது தேவகுமாரனாக, இயேசுவைப்பற்றிய உண்மையான அறிவுக்கு வரும் அனைவரும், பிதாவின் பிரதிநிதியாக அவருக்கு முன்பாக மகிழ்ச்சியோடு மண்டியிட்டு வணங்குகிறார்கள். அவ்வாறே உலகமும் ஒரேபேறானவரை மகிழ்ச்சியோடு அங்கீகரித்து, அவருக்கு கீழ்ப்படிதலை காண்பிக்கும்.

இறுதியில் ஒவ்வொரு முழங்காலும் முடங்கும், ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும். ஏனெனில் தெய்வீக ஏற்பாட்டின்படி, மகிமைப்படுத்தப்பட்ட தேவகுமாரனை அவ்வேளையில் ஏற்கத் தவறுவோர் அனைவரும் தேவ தயவையும் தேவ ஆசீர்வாதங்களையும் கூடுதலாகப் பெறத் தகுதியற்றவர்களாக கருதப்பட்டு, அழிக்கப்படுவார்கள். ஏனெனில் விழுந்துபோன மனித சந்ததிக்கென வடிவமைத்துள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் கிறிஸ்துவின்மீது பொழிந்தருளியிருக்கிறார்.

**"நீங்கள் புறப்பட்டுப்போய், போதியுங்கள்"**

இதோ அந்த பணிநியமனம், இது முதன்மையாக பதினோரு அப்போஸ்தலர்களுக்குரியது, பின்னர் அதில், யூதாஸின் இடத்தைப் பிடித்த பரிசுத்த பவுலும் அடங்குவார். இவர், "மகா பிரதான அப்போஸ்தலரிலும்... ஒன்றிலும் குறைவுள்ளவரல்ல" (2கொரிந் 11:5). அப்போஸ்தலர்கள் மட்டுமே உலகில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மற்றும் அவரது சபைக்கு நாவுகளாக இருக்கும்படி அங்கீகாரம் பெற்றனர். அந்த 12பேரின் வாரிசுகளாக இருப்பவர்கள் அப்போஸ்தல பிஷப்புகள் என்று நமக்கு கூறப்பட்டவை அனைத்தும் பொய்யானவை, வேத ஆதாரமற்றவை. அப்போஸ்தலர்களுக்கு எந்த வாரிசுகளும் இல்லை. அவர்கள் இன்னும் நம்முடன் இருக்கிறார்கள். அவர்கள் மூலம் நம் குருவின் செய்தி புதிய ஏற்பாட்டில் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது; அவைகளில் ஒன்று, தேவனுடைய மனுஷன் தேறினவனாக இருக்க தேவ வசனம் போதுமானது (2தீமோ3:16,17) என்று எழுதியிருக்கிறது. அப்போஸ்தலர்களுக்கு சபையைத் துவங்கும் மகத்தானவேலை வழங்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளில் பெற்ற வல்லமையால் அவர்கள் தரிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் சபைக்கு தம்முடைய நாவுகளாக இருக்கும்படி இயேசு தம் பன்னிரெண்டு சீஷர்களை நியமித்திருந்து, பூமியில் அவர்கள் கட்டுவது எதுவோ அவை பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூமியில் அவர்கள் கட்டாதது எதுவோ, பரலோகத்திலும் அது கட்டப்படாது என்று வாக்களிக்கப்பட்டதை நாம் அறிவோம். என்றாலும், திருச்சபையின் ஒவ்வொரு அங்கமும் அவரது பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்றும், ஒவ்வொருவரும் அவரவர் வாய்ப்பு மற்றும் திறனுக்கேற்ப சுவிசேஷ செய்தியை அறிவிப்பதில் பங்குபெறலாம் என்றும் கர்த்தர் ஏற்பாடு செய்திருக்கிறார். யார் ஆவியின் ஜெநிப்பிக்குதலையும், அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்ட எவரும் ஏசாயா 61:1–3இன் கூற்றுப்படி, தலையாகிய இயேசுவின் அபிஷேகத்தின்கீழ் அவர் கிறிஸ்துவின் சரீர அங்கமாக சேர்க்கப்படுகிறார்.

"கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்மேல் இருக்கிறது.. சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு காயங்கட்டுதலைக் கூறவும் அவர் என்னை அனுப்பினார்" என்று நாம் வாசிக்கிறோம். பரிசுத்தஆவியைப் பெறும் ஒவ்வொருவரும் இவ்வாறு திருநிலைப்படுத்தப்பட்டு அல்லது அங்கீகாரம் பெற்று, அவரவர்

வாய்ப்புக்கேற்ப அல்லது சூழ்நிலைகளின் வரம்புக்கேற்ப பிரசங்கிக்கவேண்டும். அப்போஸ்தலரின் ஒரு வரம்பு என்னவென்றால், சகோதரிகள் வெளிப்படையாக கற்பிக்கக்கூடாது(1தீமோ2:12). இருப்பினும் அனைவருக்கும் ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன.

ஆகையால், தேவனுடைய செய்தியைப் பிரசங்கிக்கவோ அல்லது கற்பிக்கவோ நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்று தங்களைத்தாங்களே அறிவித்துக்கொள்ளும் மதகுருமார்களின் ஏற்பாட்டில் ஒரு பெரிய தவறு நடந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. இயேசுவும் அப்போஸ்தலர்களும் மதகுரு வகுப்பார் அல்லது பாமர ஜன வகுப்பார் பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை. மாறாக, ''கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்'' என்று கர்த்தர் அறிவிக்கிறார்(மத்23:8). மேலும் குருவும் அவரது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும், குறிப்பாக தம்மைப் பின்பற்றுபவர்களிடையே ஒரு பிரபுத்துவம் அணுகுகிற எதையும், குருமார் வகுப்பார் போன்ற எதையும் தடைசெய்தனர்.

**சபைக்கு பணிநியமனம்**

''ஆகையால் நீங்கள் புறப்பட்டு, சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்'' என்பதே கொடுக்கப்பட்ட செய்தி. தேசங்களை சீஷராக்குவது பொறுப்பல்ல, மாறாக வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளபடி, யார் மனதார கிறிஸ்துவின் சீஷராக விரும்புகிறார்களோ, அவர்கள் ஐஸ்வரியவான்களாகவோ ஏழைகளாகவோ, கற்றவர்களாகவோ, அல்லது படிப்பறிவில்லாதவராகவோ, உயர்ந்தவர்களாகவோ, தாழ்ந்தவர்களாகவோ இருந்தாலும், அவர்களை எல்லா தேசங்களிலிருந்தும் ஒன்றுசேர்ப்பதே இந்தப் பொறுப்பு. கிறிஸ்துவின் சீஷன் என்பவர் அவரை பின்பற்றுபவர், கற்றுக்கொள்பவர், அவரை நகலெடுப்பவர். இயேசு இந்த சீஷத்துவத்தை வரையறுத்து; ''ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால் (என் சீஷனாயிருப்பதற்கு) அவன் தன்னைத்தான் வெறுத்து(தன்னை பிரித்தெடுத்து, தன்னை புறக்கணித்து, அவனது தாலந்து, அவனது சித்தம், அவனது செல்வம், அவனுடைய எல்லாவற்றையும் விட்டுவிட்டு –சீஷத்துவமே முதலாவது), தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்''என்று கூறுகிறார்(மத்16:24).

கிறிஸ்துவின் உண்மைப் பின்னடியார்கள் அனைவரும், உண்மை சீஷர்கள் அனைவரும், கர்த்தர் தன்னை நடத்தும் கடினமான பாதையைக் கண்டுபிடிப்பார்கள், இதில் அவர்களுடைய சொந்த சித்தங்கள் தொடர்ந்து எதிர்க்கப்படவேண்டும், தொடர்ந்து கடக்கப்படவேண்டும், இவ்வழியில் அவர்கள் மாம்சத்தின்படி தொடர்ந்து சிரமப்படுவார்கள் என்பதே இதன் அறிவிப்பு. இருப்பினும், ''நான் எங்கே இருக்கிறேனோ(பரலோகத்திலோ அல்லது ராஜ்யத்தின் மகிமையிலோ), அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்'' என்பதே இறுதியான வாக்குத்தத்தம்.

கிறிஸ்துவின் திருச்சபை, ஞானஸ்நானத்தின்போது தண்ணீரில் மூழ்குவதை உலகிற்கு மரித்தலுக்கும், சுயத்துக்கு மரித்தலுக்கும் அடையாளமாக இருப்பதையும், தண்ணீரிலிருந்து மேலெழுவது கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக புதிதான ஜீவியத்திற்கு எழுவது என்று முறையாக அறிந்திருந்தாலும், தண்ணீர் ஞானஸ்நானம் என்பது உண்மைக்கான ஒரு சித்திரம் மட்டுமே. எனவே இங்கு நமது பணி, தண்ணீர் ஞானஸ்நானம் அல்ல, ஆனால் பிதாவின் நாமத்திலும் குமாரனின் நாமத்திலும் பரிசுத்த ஆவிக்குள்ளான ஞானஸ்நானமே என்று கூறப்படுகிறது. ''நாமத்திற்குள்'' என்பது, இணக்கத்திற்குள், ஐக்கியத்திற்குள் இருப்பதை குறிக்கிறது. கிறிஸ்துவின் சீஷர்கள் அனைவரும் நீதிக்காய் நிற்பதாக, பிதாவின் நாமத்தை அங்கீகரிக்கவேண்டும், மேலும் அவர்கள் அவருடைய நாமத்தை பிரதிநிதித்துவப்–படுத்துவதோடுகூட, மற்ற எல்லாக் கொள்கைகளுக்கும் மரித்து, நீதி நியாயம், சத்தியம் என்ற அந்த நாமத்திற்குள் முழுமையாக மூழ்கவேண்டும்.

லுத்தரன்கள் அல்லது வெஸ்லியன்கள் அல்லது கால்வினிஸ்டுகள் அல்லது ரோமன் கத்தோலிக்கர்கள் அல்லது ஆங்கிலிகன் கத்தோலிக்கர்கள் அல்லது கிரேக்க கத்தோலிக்கர்கள் போன்ற சபைகளின் பெயர்கள்போன்ற அனைத்துப் பெயர்களையும் புறக்கணித்து, இவர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் முழுமையாக மூழ்கி, அவருடைய நாமத்தை அங்கீகரித்து, அவருடைய அங்கங்களாக, அவருடைய சரீரமாக, அவருடைய திருச்சபையாக இருக்கவேண்டும். மேலும் அவர்களுடைய சொந்த ஆவி, அவர்களுடைய சொந்த சித்தங்களுக்கு மரித்திருந்து, பரிசுத்த ஆவியிலும் பரிசுத்த ஆவியின் அங்கீகாரத்திலும் மூழ்கவேண்டும் –அவர்களுடைய சொந்த நோக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் வருங்கால வாய்ப்புக்கள் புறக்கணிக்கப்படவேண்டும். தேவனுடைய பரிசுத்த சித்தம், தேவனுடைய சிந்தை, தேவனுடைய பரிசுத்த நோக்கமே அவர்களின் விருப்பமாகவும் நோக்கமாகவும் இருக்கவேண்டும்.

இவ்வாறு நம் செய்தியை, கேட்கிறதற்குக் காதுள்ள எல்லா தேசத்து ஜனங்களையும் நோக்கியே நமது பணிநியமனம் இருப்பதை நாம் காண்கிறோம். அவர்களை சீஷராக்கி, பிதா குமாரனின் நாமத்தில் பரிசுத்த ஆவியில் மூழ்கச்செய்ய வேண்டும். இயேசு கட்டளையிடும் எல்லாவற்றையும் கடைப்பிடிக்க அவர்களுக்கு நாம் கற்பிக்கவேண்டும். இதுவே நம் அதிகாரத்தின் அளவு. நாம் மனித அமைப்புக்களை ஒழுங்கமைக்கவோ, அவற்றை ராஜ்யங்கள், திருச்சபைகள் அல்லது பிற பெயர்களில் அழைக்கவோ கூடாது. இயேசுவின் சீஷர்களைத் தயார்ப்படுத்துவதும், தம்முடைய தயவுள்ள

சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் அவர்களில் உருவாக்குகிற தேவனோடு இணைந்து செயல்படவும் மாத்திரமே நாம் இருக்கிறோம்.

**"உலகத்தின் முடிவுபரியந்தம்.."**

"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்". உலகம் முடிவுக்கு வரப்போகிறது என்பதை அவருடைய வார்த்தைகள் குறிப்பிடுவதை புரிந்துகொள்ளமுடிகிறது. அதேசமயம், கிரேக்கமொழியின்படி, இந்த சுவிசேஷயுகத்தில் கிறிஸ்துவின் போதுமான எண்ணிக்கையிலான சீஷர்களை, உண்மையாக அவருடையவர்களாயிருப்போரை கூட்டிசேர்க்கும் தெய்வீக நோக்கத்தின் பணி நிறைவேறும்வரை, ராஜரீக ஆசாரியக்கூட்டத்தாராகிய, கிறிஸ்துவின் மணவாட்டியின் சரியான எண்ணிக்கை நிறைவடைந்து, மகிமையடையும்வரை சத்தியத்துக்குக் கீழ்ப்படிவதன்மூலம் சுவிசேஷசெய்தி, பரிசுத்தமாகுதலை நிறைவேற்றிமுடிக்கும்வரை, இந்த யுகமுடிவுவரை அவர் தம் ஜனத்தோடே இருப்பார் என்பதாகும். பின்பு யுகத்தின் முடிவு சம்பவிக்கும். அப்பொழுது தம் தெரிந்துகொள்ளப்பட்டோரை கூட்டிச்சேர்க்க நம் குரு தாமே வந்திருந்து, தம்மோடுகூட அவர்களை மகிமைப்படுத்தவும், பின்பு, தெரிந்தெடுக்கப்படாத உலக மனுக்குலத்தை ஆசீர்வதிக்க அவரது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்.

--------

**R 5588**

## அவர் முன்பு எங்கே இருந்தார்?

"WHERE HE WAS BEFORE"

**லூக்கா 24:50–53; அப்போஸ்தலர் 1:1–11.**

**"மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும் ?" –யோவான் 6:62.**

நம் கர்த்தருடைய உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த நாற்பது நாட்கள், தெய்வீக நோக்கத்திற்குப் போதுமான காலமாக இருந்தன. இஸ்ரயேலரையும் உலகத்தையும் ஆள அரியணை ஏறப்போகிறார் என்று அவர்கள் நினைத்த ஒருவர், சிலுவையில் அறையப்பட்டதால் ஏற்பட்ட முதல் கலக்கத்தை சீஷர்கள் இழந்துவிட்டனர். சீஷர்களுக்கு உண்மைகளை தெரியப்படுத்துவதில் தெய்வீக வழிமுறையின் ஞானத்தை நாம் காணமுடிகிறது. பின்னர் அவர் தர்சூசைச் சேர்ந்த சவுலுக்கு தோன்றியதுபோல், இயேசு அவர்களுக்கு சூரியப்பிரகாசத்துக்கும் மேலான வெளிச்சத்தில் தோற்றமளித்திருந்தால் அவர்கள் எச்சரிக்கை அடைந்திருக்க மாட்டார்கள். அவர்களுடைய கர்த்தர் மரித்த நிலையில் இன்னும் இல்லை. ஆனால் உயிரோடிருக்கிறார் என்று அவர்கள் படிப்படியாக கற்றுக்கொண்டனர். அவர் இனியும் மனித ஜீவியாக மனிதரின் பழக்கவழக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை. தற்போது ஆவிக்குரிய ஜீவியாக இருக்கிறார். ஆகவே மனிதருடைய தோற்றத்தின்படி இருந்தாலும், தேவதூதர்களைப்போல் காற்றைப்போல் வருவதும் போவதுமாக இருந்து, விருப்பத்தின்படி தோற்றமளிப்பதும், காணப்படாமற்போவதுமாயிருந்தார்.

இப்பாடத்தைப் புரிந்துகொள்வது மெதுவாக நடக்கும் செயல்முறையாயிருந்தது. முதல்நாளில் மூன்றுமுறை தோற்றமளித்தபிறகு, அடுத்து வரவிருக்கிற ஓய்வுநாள்வரை, நான்காவது தோற்றம் அல்லது வெளிப்பாடு ஏற்படும்வரை அவரை ஒவ்வொருநாளும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இந்தத் தாமதம், அவரைப்பற்றிய அறிவுக்கான அவர்களது பசியையும், ஏக்கத்தையுமே தூண்டியது. இதற்கிடையில், இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது அவர்களிடம் கூறின எல்லாவற்றையும் அவர்களால் சிந்திக்கமுடிந்தது, அவ்வாறே செய்தார்கள். மேலும் பரலோக ராஜ்யத்தை பூமிக்குரியதாக தவறாக எடுத்துக்கொண்டதையோ, அல்லது குறைந்தபட்சம் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான காலத்தை அவர்கள் தவறாக கணித்ததையோ அவர்கள் உணர்ந்தார்கள்.

எம்மாவூருக்குச் செல்லும் வழியில் கொடுக்கப்பட்ட பாடம், மிகவும் ஆழமாகப் பதிகிறதாக இருந்திருக்கவேண்டும். இது இயேசுவோடு தொடர்புடைய தீர்க்கதரிசனங்களைப் பற்றியது. மேலும் இந்த தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு நிறைவேறிக்கொண்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு விளக்கியது. அவற்றில் சில ஏற்கனவே நிறைவேறியுள்ளன, மேலும் அவற்றில் சில இன்னும் எதிர்காலத்தில் நிறைவேற உள்ளன. அவர் இந்த விளக்கங்களை வெளிப்படுத்தினபோது, அவர்களின் இருதயங்கள் அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரிந்தன என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்!

**ஒரு முக்கியமான பாடம்**

நான்கு தோற்றங்களுக்குப் பிறகு, இரண்டு முழு வாரங்கள் எந்த வெளிப்பாட்டையும் ஏற்படுத்தாமல் கடந்துபோயின. அந்த நேரத்தில் பதற்றம் தளர்ந்து, பூமிக்குரிய விவகாரங்கள் தங்களை நிலைநிறுத்திக்கொள்ளத் தொடங்கின. சீஷர்கள் என்ன செய்வார்கள்? தனிப்பட்டமுறையில் அவர்கள் தங்கள் முந்தைய வேலைக்குத் திரும்புவதன் ஞானத்தைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தார்கள், அதிலிருந்து இயேசு அவர்களை மனிதர்களை பிடிப்பவர்களாக அழைத்திருந்தார். ஆனால் அவர்களில் ஒருவரும் மற்றவர்களுக்கு இந்த விஷயத்தைப் பற்றிப்பேச அக்கறை காட்டவில்லை. எப்போதும் சிந்திக்கிற, செயல்படுகிற தலைவராக இருந்த பரிசுத்த பேதுரு, "நான் மீன்பிடிக்கச் செல்கிறேன்" – நான் மீன்பிடித்தொழிலுக்குத்

திரும்புகிறேன் என்று இறுதியாக தன்னைக் குறித்து அறிவித்தார். இந்த ஒரு வார்த்தையே தேவைப்பட்டது. மற்றவர்களும் அதே மனநிலையிலிருந்ததால் பழைய தொழில் மீண்டுமாக சீரமைக்கப்பட்டது.

அப்படிப்பட்ட ஒரு முடிவினால்தான் இயேசு தம்முடைய பரத்துக்கேறுதலை தாமதப்படுத்தினார். அவர் இல்லாதபோதும் அவருடைய ஆசீர்வாதத்துடன் மனிதர்களைப்பிடிக்கும் வேலையில் அவர்கள் தொடர்ந்து ஈடுபடமுடியும் என்பதை அவர் அவர்களுக்குக் காண்பிப்பார். குரு அவர்களுடைய நலன்களைக் கவனித்துக்கொண்டார், அந்த இரவு அவர்களுக்கு துரதிஷ்டத்தைக் கொடுத்தது, அவர்கள் எதுவும் பிடிக்கவில்லை, அவர்கள் சோர்வடைந்தனர். ஆனால் அது ''அவர்களுக்கு நல்லதாயிருந்தது''. எழுதப்பட்டபடி ,தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் – அவர்களுடைய பொருளாதார ஏமாற்றங்களும்கூட, நன்மைக்கேதுவாகவே நடக்கிறது.

காலைவேளையில் இயேசு கரையில்நின்று அவர்களை அழைத்து, அவர்களிடம் விற்பனைக்கு மீன் இருக்கிறதா என்று கேட்டார். அவர்கள் எதையும் பிடிக்கவில்லை என்று பதிலளித்தனர். ''படகின் மறுபுறத்தில் வலையைப் போடுங்கள்'' என்று குரு கூறினார். அத்தகைய அறிவுரை முட்டாள்தனமானது என்று அவர்கள் கூறியிருக்கலாம். ஆனால் அவர்களின் ''துரதிஷ்டத்திலிருந்து'' விடுபட ஏதாவது செய்யவேண்டும் என்ற மனநிலையில் அவர்கள் இருந்தனர். அவர் சொன்னபடியே அவர்கள் வலைவீசினர், ஏராளமான பெரியமீன்களால் வலை நிரம்பியிருந்தது. பின்பு கரையில் இருப்பவர் தங்கள் உயிர்த்தெழுந்த கர்த்தராக இருக்கவேண்டும் என்பதை அவர்கள் அறிந்தார்கள். அவர் இவ்வாறு அவர்களுக்கு தன்னை புதிதாக வெளிப்படுத்தினார்.

மீனவர்கள் கரைக்கு விரைந்தனர். இதுபோன்ற ஒரு அனுபவத்தை மட்டுமே அவர்கள் அடைந்திருந்தனர், அதற்குமுன்பு ஒருமுறை குரு அவர்களுக்கு இதேபோன்ற பெரிதான மீன் பிடித்தலை வழங்கியிருந்தார். படகு, பரிசுத்த பேதுருவுக்காக மிக மெதுவாக நகர்ந்தது. குரு எப்படியாவது மறைந்துவிடுவார் என்று அவர் பயந்தார். தனது மீனவ உடையை அணிந்துகொண்டு, அவர் கரைக்கு நீந்தினார். குருவோ அவர்களைவிட்டுப்போகாமல், ஏற்கனவே நெருப்பில் இடப்பட்டிருந்த மீன்களை சாப்பிடுவதற்கு, பேதுருவையும் அவருடைய தோழர்களையும் அழைத்தார்.

இது ஒரு சிறந்த பாடமாயுள்ளது. அவர்களுக்குத் தேவைப்படும்போது அவர்களுடைய எஜமானரால் சமைத்த மீனை வழங்கமுடியும். மேலும் அவர்களுடைய மீன்பிடித் தொழிலில் அவருக்கு சிறந்ததாகக் கண்ட அதிக வெற்றியை அவர்களுக்கு வழங்கமுடியும். இந்த தருணத்தில் அவர்களுடைய தேவைகளில் இவ்வாறு அவரால் வழங்க முடியுமென்றால், வருங்காலத்திலும் அவ்வாறே செய்வார், அவர்களை அவர் மீண்டும் அனுப்பும்போது, அவரது நாமத்தில் பேச அதிகாரம் பெற்றவராக அவ்வாறு செய்யமுடியும். அவர்களில் யாரும் அந்த அந்நியரிடம் அவரது பெயரைக் கேட்கவில்லை. ஏனென்றால் அவரது முகபாவனைகளும் அவரது உடைகளும் வேறுபட்டிருந்தாலும் அது அவர்களுடைய கர்த்தரின் மற்றொரு வெளிப்பாடு என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவர் செய்ததுபோல் பல்வேறு வடிவங்களில் அவரால் தோன்றமுடிந்தது, அவர் இனியும் ஒரு மனித ஜீவியல்ல.

இயேசு காணப்படாமற்போனார் என்று இப்பாடம் கற்பிக்கிறது. அவர் கலிலேயாவில் தம் சீஷர்களோடு இன்னொரு சந்திப்பை நடத்தினார். அது முன்பே ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு. இயேசு தம் சீஷர்களை அங்கு சந்திப்பதாக செய்தி அனுப்பியிருந்தார். சுமார் ஐந்நூறு சகோதரர்கள் அவரைக் கண்டதாகவும், உயிர்த்தெழுதலுக்கு சாட்சிகளாக இருந்ததாகவும் பரிசுத்த பவுல் கூறுகிறார் – 1கொரிந் 15:6.

**நம் கர்த்தரின் பிரியாவிடை அறிவுரைகள்**

இந்த நமது பாடம் குறிப்பாக, இயேசுவின் பரத்துக்கேறுதலுடன் தொடர்புடையது. இது எருசலேமுக்கு அருகில் பெத்தானியாவில் நடந்தது. அவர் தனது சீஷர்களை பரிசுத்த நகரத்தில் சந்தித்தார். ஒருவேளை அதிகாலையில் முன்பதிவு செய்யப்பட்ட சந்திப்பாக இருந்திருக்கக்கூடும். அவர் அவர்களை பெத்தானியாவுக்கு அழைத்துச்சென்று பேசிக்கொண்டிருந்தார். அவர் அவர்களைவிட்டுச் செல்வதற்கு முன்பு, அவர்கள் முழுமையாக நம்பவேண்டிய விஷயங்களை அறிந்துகொள்வதற்கும், அவர் இன்னும் அனுப்பவேண்டிய ஆசீர்வாதங்களுக்கு ஆயத்தமாக சரியான விசுவாச மனப்பான்மையில் இருப்பதற்கும் முன்பு, அவர்களுக்கு நன்மை பயக்கும் விஷயங்களை விளக்கினார்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தையும் எழுதிய பரிசுத்த லூக்கா, உயிர்த்தெழுந்தபின்பு நாற்பது நாட்கள் இயேசுவின் போதனையின் சாராம்சம் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியது என்று நமக்குக் கூறுகிறார். இருப்பினும் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை. உண்மையில் பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலை பெறும்வரை அவர்களால் முழுமையாகப் புரிந்துகொள்வது இயலாததாகும். ஆகையால் அவர்களுடைய கவனத்தை, பரிசுத்தஆவியை அடையும் கட்டத்தை நோக்கி திருப்பி, அவர்கள் எருசலேமைவிட்டு வெளியேறவோ அல்லது எந்தப் பிரசங்கவேலையிலும் ஈடுபடவோகூடாது, பிதாவின் வாக்குத்தத்தத்துக்காக, அவர் முன்பே அவர்களுக்கு சொல்லியிருந்த பரிசுத்தஆவியின் வரத்தின்

வாக்குத்தத்தத்திற்காக அவர்கள் காத்திருக்கவேண்டும் என்று கூறினார். யோவான் ஸ்நானகன் உண்மையில் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பயன்படுத்தினார். ஆனால் தம்மைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் உயர்ந்த ஞானஸ்நானத்தையும் தகுதியையும் பெந்தெகொஸ்தே நாளில் பெற்ற ஆவியின் ஞானஸ்நானத்தையும் பெறவேண்டும் என்று அவர் நோக்கம் கொண்டிருப்பதாக விளக்கினார்.

இந்த கடைசி சந்தர்ப்பம் அநேகமாக ஏழாவது வெளிப்பாடாக இருந்திருக்கலாம், சீஷர்கள் தங்கள் கருத்தை புரிந்துகொண்டதன் நிமித்தமாக, ''ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரயேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?'' என்ற மிக முக்கியமான கேள்வியைக் கேட்டார்கள். யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவின் நாட்களில் இஸ்ரயேலிடமிருந்து ராஜ்யம் பறிக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில், மேசியா வரும்வரை ராஜ்யத்தைக் கவிழ்ப்பேன் என்றும், ''உரிமைக்காரரானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும், அவருக்கே அதைக்கொடுப்பேன்'' என்று யேகோவா தேவன் சொல்லியிருந்தார் – எசேக்கி 21:25–27.

சீஷர்கள் இயேசுவை மேசியாவாகக் கருதினபடியால், பிதா அவருக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும் நேரம் வந்துவிட்டது என்று எண்ணினர். ஆனால் பரலோக ராஜ்யம் ஆட்சியாளர்களின் கைகளால் வன்முறையால் பாதிக்கப்பட்டது, அரியணைக்கு உரிமைக்காரரான வாரிசு கொல்லப்பட்டார், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான முரண்பாடான சாட்சிகளாயிருந்தனர். ஒரு ராஜா இருப்பார் என்ற நம்பிக்கையை அவர்கள் மீண்டும் பெற்றிருந்து, தங்கள் குரு இக்காலத்திலா அல்லது எதிர்காலத்திலா தம் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என அப்போது விசாரித்துக்கொண்டிருந்தனர் –அப் 1:6,7.

''பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற(அவருடைய சொந்த வல்லமையில் வைத்திருக்கிற) காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல'' என்று கூறின ஆண்டவரின் பதில் குறிப்பிடத்தக்கது. ஏற்றவேளையில் அவர்கள் காலங்களையும் வேளைகளையும் அறிந்துகொள்வார்கள் என்று குரு ஏற்கனவே தம்முடைய சீஷர்களுக்குத் தெரிவித்திருந்தார். ஆனால் அப்போது அவர்கள் அந்தக் காரியங்களைப் புரிந்து–கொள்வதற்கான தருணமல்ல. அவர்கள் பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும். பொறுமையை வளர்ப்பது அவர்களுக்கு நன்மை பயக்கும், அவர்களுடைய விசுவாசத்தை பலப்படுத்தும், பொதுவாக அவர்களின் குணநலனை பலப்படுத்தும்.

மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னதாகவே, 19 நூற்றாண்டுகள் நீண்ட கால இடைவெளியை பிதா அறிவித்திருந்தாரானால் அது ஞானமாக இருந்திருக்காது. அவருடைய ஜனங்களின் நன்மைக்காக இருந்திருக்காது, ஏனெனில் அவர்களுடைய நம்பிக்கை தாமதமாவதைக் கண்டு அவர்கள் சோர்வடைந்திருப்பார்கள். ஆகையால் அவர்கள் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டும் என்றும், குறிப்பாக பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெறும்வரையில், தேவதிட்டத்தைப் பற்றிய எதையும் அவர்கள் புரிந்துகொள்ள எதிர்பார்க்கக்கூடாது என்றும் எஜமான் சுட்டிக்காட்டினார்.

பரிசுத்தஆவியைப் பெற்றபிறகு, அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாகவும், தேவனுடைய செய்தியைப் பேசவும் அவர்கள் முழுமையாகத் தகுதியடைவார்கள். அவர்களுக்கு காலாகாலத்துக்கு ஏற்றவேளையிலான போஜனம் அளிக்கப்படும். இவ்வாறு அவர்கள் உலகத்தோடு இருளில் இருக்கமாட்டார்கள், கர்த்தருடைய நாள் இரவில் ஒரு திருடனைப்போலவோ அல்லது ஒரு கண்ணியைப்போலவோ அவர்கள்மீது வராது. அவர்கள் பெற்ற பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்கள் அவர்களது சுபாவக்கறைகளை மூடவில்லையென்றாலும், ஊழியத்தின் வேலைக்கு அவர்களை முழுமையாகத் தகுதிப்படுத்தியது. ஏனென்றால் அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றபிறகுதான், ஜனங்கள் : ''... அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ...'' என்று நாம் வாசிக்கிறோம் – அப்4:13.

**நம் கர்த்தரின் விண்ணேற்றம்**

நம் கர்த்தர் பரமேறுதல், அவருடைய திருச்சபையைப் பொறுத்தவரை அற்புதமான ஒன்றாக இருந்தது, ஆனால் உலகத்தைப் பொறுத்தவரை அல்ல. உலகத்தைப் பற்றி அவர்; ''இன்னும் கொஞ்சகாலத்திலே உலகம் என்னைக் காணாது'' என்று கூறியிருந்தார். அவர் தம்முடைய சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்திய நாற்பது நாட்களில் உலகம் நம் கர்த்தரைக் காணவில்லை, ஏனென்றால் அவர் தம் உண்மையுள்ளவர்கள் மற்றும் அர்ப்பணிக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாருக்கும் தம்மைக் காண்பிக்கவில்லை. அவரது சீஷர்களுக்கு மிகவும் உதவியாக இருந்த – கண்ணால் காணக்கூடிய வெளிப்படுத்தல்கள், சற்றுமுன் அவர்களோடு அவர் காணப்பட்ட சரீரத்திலேயே ஆகாயத்தில் உண்மையான பரமேறுதலின்போதும் இருந்து, உச்சகட்டத்தை அடைந்தது. சீஷர்கள் இன்னும் ஆவியில் ஜெநிப்பிக்கப்படாததால், அவர்களின் விசுவாசத்திற்கு உதவிகரமாயிருக்கவும், கர்த்தர் வல்லமையோடும் மாபெரும் மகிமையோடும் வந்திருந்து, தம்முடைய எல்லா பரிசுத்தவான்களையும் தம்மிடத்தில் கூட்டிச்சேர்த்து, உலகத்தை ஆசீர்வதிக்கும்வரை, அவர்கள் இனி அவரைக் காணமாட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவும்,

அத்தகைய வெளிப்பாடு அவர்களுக்குத் தேவைப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

இயேசு இந்த பரமேறுதலைப்பற்றி முன்பே பேசினதை நமது பாடத்தின் திறவுகோல் வசனம் நமக்கு நினைவூட்டுகிறது. இருப்பினும், அவர் முன்பு இருந்த இடத்திற்கு பரமேறினார் என்பது, முந்தைய இடத்திற்கு திரும்பினதை மாத்திரம் குறிக்காது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். மாறாக, அது முந்தைய ஆவிக்குரிய நிலைமைக்குத் திரும்புவதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அந்த நிலைமையை விட்டுவிட்டு அவர் மாம்சமானார், உலகிற்கு அவர் மீட்கும் பொருளானார்.

இயேசு தம்முடைய சீஷர்களிடமிருந்து பிரிந்து, அங்களது பார்வையிலிருந்து மறைந்து மேகங்களுக்குள் சென்றபோது, சற்றுமுன் காணப்பட்ட அவரது சரீரம் கரைந்துபோனது அல்லது உடல் களையப்பட்டது என்று நாம் யூகிக்கிறோம். சீஷர்களுடைய விசுவாசத்தை நிலைநாட்டவும், போதனைக்கான வழிமுறையாகவும், இயேசு நிரந்தரமாகச் சென்றுவிட்டார் என்பதற்கான நிச்சயமாகவும் இருக்க மட்டுமே இந்த சரீரம் பயன்படுத்தப்பட்டது. இனியும் அவர்கள் எந்தவிதமான வெளிப்பாட்டிலும் அவரைக் காண எதிர்பார்க்கவேண்டியதில்லை, இது ஒரு இலக்கு சார்ந்த பாடம்.

**நம் கர்த்தர் திரும்பிவருதலின் முறை**

இயேசு மறைந்தபிறகு, தேவதூதர்கள் உருவெடுத்து, அவர்களிடம் : "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர், எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்"(அப் 1:11). என்று கூறியதாக சுவிசேஷகர்களில் ஒருவர் நினைவுகூர்ந்தார். இந்தக்கூற்று, இயேசு தம்முடைய இரண்டாவது வருகையில் மாம்சத்தில் உருவெடுத்துத் தோன்றுவார் என்று சிலரை நம்ப வைத்துள்ளது. ஆனால் அவர்கள் ஒரு பெரிய தவறான புரிதலில் வேதனைப்படுகிறார்கள் என நாம் புரிந்துகொள்கிறோம். உலகம் இனியும் இயேசுவைக் காணாது, சபையோ இந்த யுகத்தின் முடிவில் தங்கள் மாறுதலின் அனுபவத்தை அடையும்வரை, விசுவாசக் கண்களால் மட்டும் அவரைக் காணும். அப்பொழுது, அவர் இருந்த வண்ணமாக அல்ல, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்போம். ஏனெனில் நாம் அவரைப்போலவே இருப்போம். நாம் இப்போது அவரை அறிந்துகொண்டதுபோலவே அப்பொழுது அறிந்துகொள்வோம் – 1கொரிந் 15:50–52;1யோவா3:2.

அவர் சென்ற விதத்தை தேவதூதர்கள் வலியுறுத்தினர் என்பது கவனிக்கத்தக்கது. மேலும் அந்தவிதம், நம் கர்த்தரின் இரண்டாம்வருகையைப் பற்றி வேதாகமம் நமக்குக் கூறுவதோடு ஒத்துப்போகிறது. அவர் அமைதலாக, இரகசியமாக, உலகத்திற்கு தெரியாமல் சென்றார்; இரவில் திருடன் வருகிற விதமாக அவர் திரும்பிவருவார். மனுஷகுமாரனின் பிரசன்னத்துக்குரிய அடையாளங்களை புரிந்துகொள்வதற்கு யாருடைய கண்கள் திறக்கப்பட்டுள்ளதோ, அவர்களைத்தவிர வேறொருவரும் அவரது திரும்பிவருதலை அறியமாட்டார்கள். இவர்கள் அவருடைய உண்மையுள்ளவர்கள், பரிசுத்தவான்களாகிய சிலராயிருப்பர். எனவே, நோவாவின் நாட்களில் இருந்ததுபோல, அவருடைய வருகையின் காலத்திலும் இருக்கும் என்று இயேசு விளக்கினார். மனுக்குலம் உண்டும், குடித்தும், நடவுசெய்தும், திருமணம் செய்தும் இருந்து, அவரது பிரசன்னத்தை அறியாது –மத்தேயு 24:37–39.

–––––––

**எல்லாவற்றிலும் நன்றிகூறுங்கள்**

கர்த்தாவே! எங்கள் உணவுக்காகவும் உடைக்காகவும் நன்றிகூறுகிறோம்!

எல்லா நன்மைகளையும் அளிப்பவரே, எங்கள் தங்குமிடத்திற்காக நன்றி!

எங்கள் கண்கள் முதன்முதலில் ஒளியைக் கண்ட அந்த நாளுக்காக நன்றி!

கேட்கவும் பார்க்கவுமான ஒவ்வொரு புலனுக்கும் நன்றி !

சூரிய ஒளிக்காகவும், மழைக்காகவும் நன்றி!

இன்பத்திற்காகவும் துன்பத்திற்காகவும் நன்றி!

நாங்கள் ஜெயித்த நண்பர்களுக்காகவும், நாங்கள் இழந்த நண்பர்களுக்காகவும் நன்றி !

இந்த பிரிவுகள் ஏற்படுத்தின மனவேதனைகளுக்கு நன்றி!

எங்கள் ஒவ்வொரு அன்புத்தளையும் எங்களை உம்மிடம் இழுத்துள்ளதைக் காட்டும் மென்மையான அன்புக்கு நன்றி !

நாங்கள் சொல்லிலோ செயலிலோ தவறும்போது மன்னிப்பதற்காக நன்றி!

ஏற்றசமயத்தில் போதுமான கிருபையை அருளுவதற்காக உம்மைத் துதிக்கிறோம்!

ஆசீர்வதிக்கப்பட்ட பிதாவே, உம் நேச குமாரனை பரிசாகத் தந்ததற்காக நன்றி!

அவர் அடைந்த வெற்றிக்காக நன்றிகூறுகிறோம், புகழுகிறோம்!

அவருடைய நீதிக்காகவும், அவருடைய ஆடை மிகத் தூய்மையும் வெண்மையுமாய் இருந்ததற்காக நன்றி!

அதை அணிந்திருக்கும்போது, உம் பார்வையில் குற்றமற்றவர்களாக இருப்பதற்காக உம்மைப் புகழுகிறோம்!

ஓ, உம் நன்மையும் விலையேறப்பெற்ற வார்த்தைக்காக நன்றி!

–––––––